905

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923௵ ஏப்ரல்௴ 1௳ [பகுதி 3.

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"துடும்பசாபம்" யென்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

5-JUN

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" எனனும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரு. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923௵ மார்ச்சு௴ 1௳ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவரும். அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

இலக்ஷ்மணனது வாசஸ்தலத்திற்குச் சென்று விசாரித்த போது அவன் இரவு முன்னேரத்தில் இரண்டு மூன்று மணிகள் நேரம் வீட்டைவிட்டு எங்கோ சென்றிருந்தான். ஆனால் அதற்குக் காரணம் கூற அவன் பிரியப்படவில்லை. அதன்மேல் நான் 'நீ டாக்டர் தேவராஜைப் பிள்ளையைக் கொன்றாய் என்ற சந்தேகத்தின்மேல் உன்னைக் கைது செய்யப் போகிறேன்' என்றேன். அவன் ஆத்திரத்தோடு நான் கொல்லவில்லை யென்று மறுதலித்து விட்டான். அவன் மனைவியும் புத்திரனும் பிரலாபித்தார்கள். நான் என் கடமைப்படி அவனைச் சிறைசெய்து விட்டேன்" என்றான்.

டாக்டர் "ஆகா! இவ்வுலகத்தில் நன்மைசெய்ததற்குப் பதிலாய்த் தீமைசெய்கிறவர்களே யதிகமா யிருக்கிறார்கள். நான் வாக்களித்தபடி நான் அளிப்பதாய்க் கூறிய நூறு ரூபாயும் இதோ அளிக்கிறேன்" என்று அத்தொகையை யெடுத்து அவனிடம் அளித்தார். அவன் அவ்வளவு தொகை யகப்பட்டதற்கு மிக்க சந்தோஷமடைந்து விடைபெற்றுச் சென்றான்.

சற்று நேரத்திற்குள் ஒரு வேலைக்காரன்வந்து டாக்டரை நோக்கி "யாரோ ஒருமாது வந்து தங்களைத் தனியாய் உடனே அவசியமாய்க்கண்டு பேசவேண்டுமென்று கூறுகிறாள்" என்றான். டாக்டர் உடனே அவள் யாரா யிருக்கும் என்று உணர்ந்துகொண்டு உடனே எழுந்து அவள் வந்திருக்கும் அறைக்குச் சென்றான். அவன் கருதியபடி பத்மநாயகியே அங்கு வந்திருந்தவள்.

186488

அவள் டாக்டரைக் கண்டதும் "இந்த அகோரமான சங்கதியைக் கேள்விப்பட்டீரோ?" என்றாள். டாக்டர் "ஆம், உன் பரிதாபமான கணவன்றான் என்

தமையனைக் கொன்றான் என்று இப்போதுதான் கேள்விப்பட்டேன்" என்றார்.

பத்மநாயகி.—"ஆனால் அவரே கொன்றாரென்று நான் சற்றும் நம்பக்கூடவில்லை" என்றாள்.

டாக்டர்:—"பத்மநாயகி! பிரத்தியட்சமாய் அகப்பட்டிருக்கும் ருசுவுகளின் முன் கண்மூடித்தனமாய்ப் பேசாதே. அவன் கோபத்தால் உன்னைக் கொன்றுவிடாமல் விட்டுவிட்டதைப்பற்றி நீ சந்தோஷமடைய வேண்டும். அவன் மிக்க உரோஷமுடையவன். நடந்த விஷயத்தால் தனக்கு அவமானம் உண்டாகி விட்டதாய் அவன் கருதிக்கொண்டான். ஆகையால் தனக்கு இத்தகைய அவமானமுண்டாக்கியவன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று துணிகரம் கொண்டு இவ்வாறு செய்தான்" என்றார்.

பத்மநாயகி:—"ஆயினும் அவர் எவ்வளவோ சாந்தமாகவும், உறுதியாகவும், கூறினார்" என்றாள்.

டாக்டர்:—"ஆ! பத்மநாயகி, நீ இவ்வளவு தானா? மனிதர்களுடைய குணங்களை யின்னும் நீ அறிந்து கொள்ள வில்லையா? அவன் இரவு இரண்டு மூன்று மணிநேரம் வெளியே எங்கோ போயிருந்தான். அதற்கு விவரம் கூற அவனால் முடியவில்லை" என்றான்.

பத்மநாயகி:—"ஆம்; போலீஸாரிடம் கூறவில்லை. ஏனெனில் அவர் நான் துரிதமாய் வாராததைக்கண்டு என்னைத் தேடிக்கொண்டு சென்றிருந்தார்" என்றாள்.

டாக்டர் "ஆ! சரிதான். உன்னைத் தேடிக்கொண்டு சென்றபோது வழியில் தெய்வகதியாய் என் தமையனைக் கண்டிருப்பான். உடனே ஆத்திரத்தை யடக்க முடியா

மல், தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளக் கருதி, தன் ஈட்டியால் குத்திவிட்டான்'' என்றார்.

பெண்பாலாகிய அம்மாது அதற்குமேல் ஒன்றும் கூறமுடியவில்லே. டாக்டர் "என் அன்பார்ந்த பத்ம நாயகி! நீ மன உறுதியோடிருக்கவேண்டும். இப்போது அவன் நிரபராதியென்று நிரூபிக்க முயல்வதில் ஒரு பயனு மில்லே. நீ கடைசியில் எப்படியும் அவனேவிட்டுப் பிரிந்து விட வேண்டுமென்று முன்னமே கூறினேனல்லவா. அதோடு நீ அடையத்தக்க நிலைமையைக் கவனி......'' என்றதே, அவள் "இல்லே யில்லே. நான் ஒன்றையும் மறக்கவில்லே'' என்றாள்.

டாக்டர் "நான் கூறுவதை நன்ருய்க் கவனத்தில் வை. இப்போது உன்னிலேமை எவ்வாறிருக்கிறது. கோமகள், சீமாட்டி என்று அழைக்கப்பட்டு அரண்மனையிலிருந்து இரட்டைப்புரவிகள் பூட்டிய இரதத்தில் ஏறி முன்பின் பணியாளர்களும் பக்கத்தில் தோழியுமாகச் சவாரி புறப் படத்தக்க நிலேமை அதி சீக்கிரத்தில் கிட்டும். இதுமட்டு மல்ல உன் மகன் கனம்பொருந்திய பிரபுவேயென்று அழைக்கப்படுவது உனக்குப் பிரியமா யிருக்குமல்லவா! ஏன், இன்னென்றும் சம்பவிக்கலாகும். அதாவது உன் புத்திரன் இராஜகுமாரி பட்டத்திற்கு வரும்போது அவள் கூடச் சிம்மாதனத்தில் உட்காரும்படியான சந்தர்ப்பமும் நேரிடக்கூடும். அந்தத் துஷ்டகேது இராஜகுமாரன் கூறியபடி நான் அரசனேக்கொன்றுவிடச் சம்மதித்திருந் தால் அவன் உடனே சிம்மாதனமேறிவிடுவான். அப் போது அரசனே என் கையில் இருப்பதாகும். அவனேடு சேர எனக்கு விருப்பமில்லே. ஏனெனில் நாம் இருவ ருமே ஒன்று சேர்ந்து நமது தந்திர சாமார்த்தியமான முயற்சிகளால் நம் எண்ணங்களே நிறைவேற்றிக்கொள்ள

வேண்டுமென்பது என் விருப்பம்; தெரிகிறதா?'' என்றான்.

இத்தந்திர உபதேசங்களைக் கேட்டதே பத்மநாயகி தன் கணவன் அச்சமயம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருப்பதையும், பெரும்பாலும் அவன் மரண தண்டனை படையலாகுமென்பதையும் யாவும் அடியோடு மறந்துவிட்டு, டாக்டரை நோக்கி, "இப்போது யாவும் நன்றாய் அறிந்துகொண்டேன். இனி ஒரே தீர்மானமாய்த் தங்கள் கூட்டாளியாய்ச் சேர்ந்து தங்கள் யோசனைப்படியே நடக்கச் சித்தமா யிருக்கிறேன்'' என்றாள். டாக்டர் "பேஷ் இப்போதுதான் நீ தைரியமுள்ள புத்திசாலி யென்றும். மேலான அந்தஸ்திலிருக்கத் தகுதி யுடையவளென்றும், உண்மையாய்க் கூறுவேன். நீ இன்னொன்று செய்யவேண்டும். அதாவது பார்ப்பவர்களுக்கு ஒழுங்காய்த் தோன்றுவதற்காக நீயுன் புத்திரனை யழைத்துக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று உன் கணவனைக்கண்டு தேறுதல் கூறிவிட்டு வரவேண்டும். ஆனால் பத்திரம் ஒரு விஷயத்தை மட்டும் மறந்துவிடாதே. அதாவது அவன் விசனப்படுவதால் மயங்கிப்போய் அவன் நிரபராதியென்று நீ நம்புவதாய் வெளியிடாதே. அவ்வாறு ருசுப்படுத்த முயல்வது வீணான காரியம். அதோடு இராஜசபையில் உயர்ந்த அந்தஸ்தையும் செல்வாக்கையும் அடைய விரும்புவோர் அவற்றிற்குத் தடையை யுண்டாக்கும் இத்தகைய அல்ப வாஞ்சைகளையும் கோழைத்தனத்தையும் அடியோடு விட்டுவிடவேண்டும் என்பதை மறவாதே'' என்றான். அவள் "நான் இன்று கேட்ட புத்திமதிகளை யினி என்றும் மறக்கமாட்டேன்'' என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றாள்.

8-வது அத்தியாயம்.

சிறைச்சாலைக் காட்சி — மனைவியின் அநீதம் — ஆச்சரியமான துணிகரச்செயல் — இலக்ஷ்மணன் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொள்ளல் — பத்மாபாயின் நிலைமையில் அபூர்வமாறுதல் — அவள் சூழ்ச்சிகள் — இராஜகுமாரியின் திருமணம் — படுமோசமான அக்கிரமச் சூழ்ச்சிகள் — கள்ளக்காதல்.

முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடந்த அதேதினம் பிற்பகல் சுமார் நான்குமணி யிருக்கும். எங்கும் சூரியப் பிரகாசத்தின் வெளிச்சம் நிறைந்திருந்தாலும் இலட்சுமணன் இருக்கும் சிறைச்சாலையிலுள்ள நிலவறைகளில் மட்டும் பாதி இருளே சூழ்ந்திருந்தது. அந்த அறைகளில் ஒன்றில் இலட்சுமணன் ஒரு பலகையாசனத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு சிரசைத் தன்கரங்களின்மேல் கவிழ்த்துக்கொண்டு ஆழ்ந்த துயரத்திலிருக்கிறான். அச்சமயம் அந்த அறையின் கதவு திறக்கப்பட்டதும், அவன் மனைவியும் புத்திரனும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களை யங்கழைத்துவந்து விட்ட காவலன் உடனே கதவை மூடிக்கொண்டு சென்றான்.

இலட்சுமணன் அவர்களைக் கண்டதும் ஆவலோடு எழுந்து இருவரையும் ஆலிங்கனம் செய்துகொண்டு தேம்பித்தேம்பி யழுதான். அச்சமயம் மனைவியின் மனமும் சற்று கரைந்துவிட அவளும் கண்ணீர்விட்டாள். சிறுவன் தன் தந்தை கொலைசெய்தவனே யென்று நம்பும்படி பூரணமாய்ப் போதிக்கப்பட்டிருந்தாலும், தந்தை யழுவதைக் கண்டதே அவனும் அழுதுவிட்டான். இலட்சுமணன் தன் மனைவியை நோக்கி,

"பத்மா! நான் கொலைசெய்தேனென்பதை நீ நம்புகிறாயா?" என்றான். அதற்கவள் "ஆ உனக்கு என்மேல் எவ்வளவு அன்பிருக்கிறதென்பதை நான் நன்கறிவேன். எனக்கு ஒருவர் தீங்கு செய்தால் உமது மனம் சற்றும் சகியாது. இது தங்களுக்கு என்மேல் அளவு கடந்த அன்பிருக்கிற தென்பதையே காட்டுகிறது" என்றாள். இலட்சுமணன் மனம் மிக்க வேதனையடைந்து, "அய்யோ கடவுளே! என் சொந்த மனைவியே என் வார்த்தையை நம்பவில்லையே! ஓ பத்மநாயகி! நாம் மணம்புரிந்துகொண்டு சுமார் எட்டு வருடங்களாகின்றன. அக்காலத்தில் நான் உனக்குப் பலவிதமான வாக்குத்தத்தங்களை யளித்தேன். நீயும் அப்படியே யளித்தாய். அப்போது நீ என் வார்த்தைகளில் பூரணநம்பிக்கை வைத்திருந்தாய். அன்று முதல் இன்றுவரையில் இந்த எட்டு வருடகாலத்தில் நான் அளித்த வாக்குத்தத்தங்களில் ஒன்றிலேனும் நான் தவறியதுண்டா? உண்மையைக் கூறு" என்றான்.

மனைவி "அவற்றில் எள்ளளவுகூடத் தாங்கள் தவறி நடந்ததேயில்லை" என்றாள். இலட்சுமணன் அப்படியிருக்க இப்போது நிரபராதி என்பதை நீ நம்பவில்லையா? கூறு. இப்போது கூறு" என்றான். மனைவி "அய்யோ! தங்கள் அளவு கடந்த அன்பை யான் அறிவேன் என்று கூறினேனே. அதைப்பற்றியே எனக்கு மிக்க மனோவேதனையேன் உண்டாக்குகிறீர்கள். அதைவிடத் தாங்கள் நிரபராதியென்று ருசுப்படுத்த முயற்சி செய்ய வழி தேடுவது நலமல்லவா" என்றாள்.

இலட்சுமணன் "பத்மா! என்னுடைய ஆபத்தான நிலைமை யெப்படிப்பட்ட தென்பதை யான் நன்றாய் அறிவேன். என்மேல் இருக்கிற விரோதமான முக்கிய சாட்சியம் நேற்றிரவு நான் இரண்டு மூன்று மணிநேரம் வெளிச்

சென்றிருந்ததற்குத் தக்கபடி சமாதானம் கூற மறுப்படுதேயாகும். நீ சீக்கிரத்தில் வருவதாய்க் கூறிவிட்டுச் சென்ருய்; ஆனுல் நீ நெடுநேரம் வரவில்லை யாதலால் நான் உனக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோவென்று அஞ்சி யுன்னைத் தேடிக்கொண்டு சென்றேன். அக்காரணத்தை வெளியிடுவேனேல் நான் உன்மேல் சந்தேகங் கொண்டிருப்பதாய் ஏற்படும். அதனுல் உன் கற்பில் யாவர்க்கும் சந்தேகம் உதிக்கும். உனக்கு அத்தகைய அவமானத்தை யுண்டாக்குவதைவிட என் பிராணனையே வேண்டுமாயினும் விட்டுவிடுவேன். எனக்கு என்ன நேர்ந்தாலும் நேரிடட்டும். ஆனுல் எனக்கு ஒரு நம்பகம். அதாவது, நான் உண்மையில், நிரபராதியையும் சத்தியவான்களையும் ஆண்டவன் எப்படியாவது காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடையவனுயிருக்கிறேன். ஆனுல் இதற்கிடையில் என் மனைவி நான் நிரபராதி யென்று நம்புகிருள் என்பதை யறிந்தால் என் மனதிற்குச் சற்று தேறுதலாயிருக்கும். ஆகையால் கடைசியாய்க் கேட்கிறேன். கூறு. ஆனுல் உன் மன சாட்சியில் பட்டிருப்பதையே கூறவேண்டு மன்றி எனக்குத் தேறுதல் கூறக் கருதிப் பொய் கூருதே" என்று கேட்டான். பத்மாபாயின் மனம் அச்சமயம் சற்று கனிவடைந்து எது எப்படிப்போனுலும் போகட்டும். நமது கணவர் நிரபராதி யென்பதை வெளியிட வேண்டும் என்றே கருதினுள் உடனே தங்கவேலுப்பிள்ளை கூறிய ஆசை யூட்டும் சங்கதிகளை யெல்லாம் நினைத்து மனதைத்திடப்படுத்திக் கொண்டு "அந்தோ! வீணே அதையே கேட்டுக்கேட்டு என் மனதிற்கு வேதனையை யேன் உண்டாக்குகிறீர்கள்?..." என்றதும்,

இலட்சுமணன் மிக்க மனுேவேதனையும் வெறுப்பும்

கோபமுமடைந்து "போதும். போதும். அய்யோ கடவுளே!" என்று கூறிவிட்டுத் தன் முழங்கால்களைக் கட்டிக்கொண்டிருக்கும் தன் புத்திரனை நோக்கி "குழந்தாய்! நான் கொலை செய்தேனென்று நீ கருதுகிறாயா?" என்றான். முன்னமே அதைப்பற்றிப் போதிக்கப்பட்டிருக்கும் அச்சிறுவன், "அப்பா! அந்த டாக்டர் தேவராஜுப்பிள்ளை மிகக் கெட்டவன். அவன் அம்மாளுக்குக் கெடுதி செய்தான். ஆகையால் நீயவனைக் கொன்றது நியாயமேயாகும்" என்றான்.

தன் மனைவியும் புத்திரனும் கூறிய மொழிகளைக் கேட்டதே அப்பரிதாபமான மனிதனுடைய மனம் என்னமாய் வேதனைப்பட்டிருக்கும் என்பதை நேயர்களே யூகித்துக்கொள்ளலாகும். அவன் மனதில் ஏககாலத்தில் ஆயிரம் செந்தேள் கருந்தேள்கள் கொட்டினதுபோலிருந்தது. அவன் "அய்யோ தெய்வமே! இது இப்படிப்பட்ட உலகமா?" என்று முகத்திலறைந்துகொண்டான்.

அச்சமயம் சிறைச்சாலைக் காவலன் அங்கு வந்து நேரமாய்விட்டது, நீங்கள் போங்கள் என்று பத்மநாயகியை நோக்கிக் கூறினான். அப்போது அவள் தன் கணவனை நோக்கி "ஒரு வார்த்தை..." என்பதற்குள், அவன் "போதும் போதும். இனி ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டாம். நீங்கள் உடனே இதைவிட்டுச் செல்லுங்கள்" என்று தன் அருகிலிருந்த இருவரையும் அப்புறம் தள்ளிவிட்டான். காவலன் அவர்களை வெளியிலழைத்துக்கொண்டு கதவைப் பூட்டிக்கொண்டு சென்றான்.

இரவு சுமார் எட்டு மணியிருக்கும். அப்போது இலட்சுமணன் அறை திறக்கப்பட்டதும் ஒரு காவலன் வந்து கதவைத் திறந்து உள்ளேயொரு ஆளை விட்டுவிட்டுக் கதவைச் சும்மா மூடிக்கொண்டு போய்விட்டான்.

ஏனெனில் உள்ளே விடப்பட்டவர் ஓர் குரு. மரண தண்டனை யடைவார்கள் என்று நம்பப்படுகிறவர்களுக்கு குரு வந்து தேறுதல் கூறுவது அந்நாட்டில் ஓர் ஏற்பாடு. அவர் தன் உள் உடுப்பின் மேல் ஓர் கறுப்பு நீண்ட அங்கியும் முகமூடியும் அணிந்துகொண்டு வருவது வழக்கம்.

குரு கதவு மூடப்பட்டதும் தன் முகமூடியை நீக்கிவிட்டு இலட்சுமணனை நோக்கி "தம்பி! நான் இந்த நிலைமையில் உனக்குத் தேறுதல் கூறி ஆண்டவன் உன் குற்றத்தை மன்னிக்கும்படி பிரார்த்திக்கவே இப்போது வந்தேனென்று நீ யறிந்துகொண்டிருப்பாயென்று கருதுகிறேன்" என்றார். இலட்சுமணன் "தந்தையே! நான் நிரபராதி" என்றான்.

குரு "ஆ! இப்படி யடியோடு பொய்கூறிச் செய்த குற்றத்தை மறைக்கப்பார்ப்பதால் உன் பாபத்தை யதிகமாக்கிக் கொள்கிறாய்" என்றார்.

இலட்சுமணன்:—"தந்தையே! அப்படியில்லை. தாங்கள் கொஞ்சம் சாவதானமாய்க் கேட்டால் நான் யாவும் கூறுகிறேன்" என்றான்.

குரு:—"அட கொலைபாதகனே! உன் குற்றம் நன்றாய் ருசுவாகிறது. நீ தப்பமுடியாது. இப்போது உன்னுயிர் கடவுளின் கையிலிருக்கிறது. ஆகையால் நாம் பிரார்த்தனை செய்யுமுன் நீ பூரணமாய் உன் குற்றத்தை யொப்புக்கொள்ளவேண்டும்" என்றார்.

அச்சமயம் இலட்சுமணன் தன் மனதில் "அடடா! இதென்ன? உண்மைக்கும் நீதிக்கும் வழியே காணோமே. அக்கிரமத்தை அக்கிரமமும், அநீதியை யநீதியும் தான் வெல்லும் போலும்" என்று சிந்தித்துக்கொண்டே குருவின் உருவத்தை யுற்று நோக்கினான். அவன் இரண்டொரு நிமிடம் அவ்வாறு நோக்கியதும் "குருவே!

என் நிலைமை மிக்க ஆபத்தானது ; ஆதலின் தாங்கள் என்னைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்'' என்று கூறிக்கொண்டே அவர் மேல் பாய்ந்து அவர் தொண்டையைப்பிடித்துக்கொண்டு அவரைக் கீழே தள்ளித் தன் ஜேபியிலிருந்த கைக்குட்டையை யவர் வாயில் திணித்து, அவர் இடுப்பில் கட்டிக்கொண்டிருக்கும் கச்சையை யவிழ்த்து அதனால் அவர் கைகால்களைக் கட்டிவிட்டு, "குருவே! நான் நிரபராதி. ஆகையால் நான் இப்படிச் செய்கிறேன். கடவுளும் தாங்களும் என்னை மன்னிக்கவேண்டும்'' என்று கூறிவிட்டு, அவர்மேல் அங்கியையும் முகமூடியையும் கழற்றித் தான் அணிந்துகொண்டு கதவைப்பூட்டி விட்டுச் சாவியை வழியிலிருந்த காவலனிட மளித்துவிட்டுப் புறப்பட்டான். காவல்காரர்கள் இவன் குருவேயென்று கருதி, வழக்கம்போல் வந்தனமளித்துவிட்டு எட்டவிலகி நின்றார்கள். பொய்க் குரு சற்று நேரத்திற்குள் சிறைச்சாலையைவிட்டு வெளிப்பட்டு இராஜ பாட்டையில் பிரவேசித்தான்.

மறுநாட்காலையில் எட்டுமணிக்குக் குற்றவாளிக்குக் காலை யாகாரம் கொண்டுவரும் காவலன் அறைக்குள் பிரவேசித்ததும் அங்கு பூமியில் ஒரு ஆள் கட்டப்பட்டுக் கிடப்பதைக்கண்டு திடுக்கிட்டுக் குனிந்து பார்த்ததும் அந்த ஆள் குருவென்றும் அவர் சவமாய்க்கிடக்கிறு ரென்றும் கண்டு பிரமிப்படைந்தான்.

மறுநாட்காலை குருவின் மரணமும் இலட்சுமணன் தப்பித்துக்கொண்டு போய் விட்டதும் ஊரெங்கும் பெரிய வதந்தியாயிருந்தன. பத்மநாயகி இதைக் கேட்டதும் "ஆ! நமது கணவர் மரணதண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டு போய் விட்டது மிக்க சந்தோஷமே. அதோடு அவர் இம்மாதிரி தப்பித்துக்கொண்டு போய்

விட்டதால் அவர் மறுபடி இந்நாட்டிற்கு வரமாட்டார்" என்று சிந்தித்துக் கொண்டாள்.

இச்சம்பவம் நடந்து நான்கைந்து வாரங்கள் கழிந்தன. ஒருநாள் அரசருடைய அரண்மனையிலுள்ளோர் அனைவரும் திடீலென்று வியப்படையும் ஒரு சம்பவம் நடந்தது. அதாவது வலைஞன் மனைவியாகிய பத்மநாயகி இளவரசியாகிய ஜீவரத்தினம் இராஜகுமாரிக்குச் செவிலித்தாயாக நியமிக்கப்பட்டு அவளுக்கு அரண்மனையிலேயே வசிக்க எல்லாச் சௌகரியங்களும் அமைக்கப்பட்டன. காரணம், அரசன் தேக அசௌக்கியத்தால் மிக்க அபாய நிலைமையிலிருந்தபோது அவள் ஏதோ முக்கியமான உதவி செய்தாள் என்பதே: ஆனால் பெரும்பாலோர் இவள் அழகே யிதற்குக் காரணம், வெளியில் கூறப்பட்டகாரணம் ஓர் சாக்கு என்றே கருதினர்கள்.

இராணிக்கும் இதே அபிப்பிராயமாயினும், இராணி தன் கணவர்மேல் மிக்க அன்புடையவளானதால் பத்மநாயகியிடம் சற்றும் வெறுப்புக் காட்டாமல் அவளை யன்புடனேயே நடத்தத் தொடங்கினள். இதனால் மற்றபேர்களும் ஒகோ இவளுக்கு அரண்மனையில் மிக்க செல்வாக்குண்டாகும்போ லிருக்கிறது என்று உணர்ந்துகொண்டு அவளிடம் மரியாதை யோடும் அன்போடும் நடந்து கொள்ளத் தொடங்கினர்கள்.

பத்மநாயகி முதலில் சாதாரண செவிலித்தாயாகவே யமர்த்தப்பட்டாலும், தான் மிக்க மரியாதையோடும் செல்வாக்கோடும் நடத்தப்படுவதை யறிந்து கொண்டனள் ஆகையால், தன் தந்திர சாமார்த்திய முழுமையும் உபயோகப்படுத்தி முக்கியமானவர்களை யெல்லாம் வசியம் செய்துகொள்ளத் தொடங்கினள். அவள் தன் சாமார்த்தியச் செயல்களால், அரசன் தன் பிரியத்தை

வெளியிட்டபோது, அவன் தன் நிபந்தனைகளுக்குச் சம்மதிக்கும்படி செய்து கொண்டாள்.

ஆகையால் ஒரு நாள் அரண்மனையில் ஒரு விசேஷ விருந்து வைக்கப்பட்டது. அன்று விருந்து முடிந்ததும், இளவரசியின் செவிலித்தாயாகிய பத்மநாயகியம்மாளுக்குக் கமலபுரம் என்ற நகரைச்சேர்ந்த சீமாட்டி என்னும் பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறதென்று யாவர்க்கும் பகிரங்கப்படுத்தப்பட்டது. அதுமுதல் அவள் கமலபுரச் சீமாட்டி அல்லது பத்மநாயகிச்சீமாட்டி என்றழைக்கப்பட்டாள். இப்படிப் பட்டங்கிடைத்ததால் கமலபுரம் என்ற நகரத்தைச் சேர்ந்த வருமான முழுமையும் அப்பட்டதாரிக்கே யளிக்கப்படும். அதோடு தாய்க்கிருக்கும் பட்டத்தால் புத்திரனுக்கும் அதே பிரபுப்பட்டம் உரிமையாகும். அதாவது தங்கவேலுப்பிள்ளை பத்மநாயகிக்குக் கூறியது அவ்வாறே நடைபெற்று விட்டது. பத்மநாயகி மிக்க சாமார்த்தியத்தோடு அப்பதவிக்குத் தக்க விதமாய் நடந்து கொண்டாள். இவள் தாழ்ந்த அந்தஸ்திலிருந்து இப்பதவிக்கு வந்தவள் என்று யாரேனும் கூறினுல் ஒருவரும் அதை நம்பமாட்டார்கள். அவ்வாறு, அப்பதவியில் பிறந்தது முதல் இருப்பவள் போலவே பத்மநாயகி நடந்து கொண்டாள்.

அவள் எல்லாவிஷயங்களிலும் தலைமை டாக்டராகிய தங்கவேலுப்பிள்ளையின் போதனைப்படியே நடக்கலுற்ருள். ஆகையால் டாக்டரே உண்மையில் சூத்திரதாரி போல் மறைவிலிருந்து கொண்டு அரசரையும் மந்திரிகள் முதலியவர்களையும் — ஏன் அந்த இராஜாங்கத்தையே ஆட்டத்தொடங்கினுன். அவன் தானே மந்திரி முதலிய உயர்ந்த பதவிகளைப் பகிரங்கமா யடைவதை விட இவ்

வாறு அவர்களை யெல்லாம் ஆட்டும் நிலைமையிலிருக்கவே பிரிய முற்றான்.

தங்கவேலுப்பிள்ளைக்கு வேண்டியது செல்வம். பணமே யவனுக்குத் தெய்வம். அரசனிடம் பகிரங்கமான உயர்பதவியிலிருந்தால் பொறுமையால் யாரேனும் கெடுதி செய்யலாம். இவ்வாறு மறைவில் பின்னாலிருந்து ஸ்திரீயின் மூலமாய் அரசனை யிஷ்டப்படி யாட்டுவதனால் தனக்கு ஆபத்து ஒன்றும் நேரிடாது. மேலும் பிரதம வைத்தியராயிருப்பதால் அரண்மனையிலேயே வசிக்கத் தனக்குப் பிரத்தியேகமாய் இரண்டறைகள் விடப்பட்டிருக்கின்றன. அரசனை யடிக்கடி பார்க்கலாம். இளவரசியின் தேக சுகத்தை மிக்க அக்கறையோடு கவனித்து வருவதாய் அபிநயித்துக்கொண்டு அடிக்கடி அவளைக்காணப் போகும் சாக்காய்ப் பத்மநாயகியைக் கண்டு தங்கள் சூழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம். அடிக்கடி அரண்மனையிலுள்ள மந்திரிகள், மற்ற உத்தியோகஸ்தர்கள், யாவரையும் சந்திப்பதால் அவர்கள் சம்பாஷணையிலிருந்து நடக்கிற எல்லா விஷயங்களையும் அறிந்துகொண்டு தங்கள் அனுகூலத்திற்குத் தக்கபடி யுபயோகித்துக்கொள்ளலாம்.

பத்மநாயகிச்சீமாட்டி கொஞ்சங் கொஞ்சமாய் அரசனைப் பூரணமாய்த் தன் வலையிற் சிக்கும்படி செய்துகொண்டாள். இவளுக்கு அரசனிட முள்ள செல்வாக்கை யுணர்ந்தோர் அனைவரும் இவளை மிக்க மரியாதையாய் நடத்தத் தொடங்கினர்கள். இவள் இளவரசியின் செவிலித்தாய் என்ற பதவியை விட்டு இப்போது அவள் உபாத்தினி என்ற பதவிக் குயர்த்தப்பட்டாள். இதனால் எந்நேரமும் இவள் கூடவே யிருக்கும் இராஜ கன்னிகை

இவள் புத்திரனுகிய இராகவனேடேயே விளையாடிக் கொண்டிருப்பது வழக்கமாய் விட்டது.

காலம் கழிந்து கொண்டே போயிற்று. சிறுவயதிலிருந்து இருவர்க்கும் சகோதரர் போன்ற விசுவாசம் உண்டாயிற்று. இருவர்க்கும் வயது முதிர்ந்து இராஜ கன்னிகை 16-வயதுடைய மங்கையாகவும் இராகவன் இருபத்தோரு வயதுடைய யௌவன வாலிபனுகவும் ஆனபோது, சிறு வயதில் இவர்களுக்கிருந்த சினேகவாஞ்சை மனமொத்த காதலாய் மாறிவிட்டது. இவர்கள் இருவர்க்கும் பரஸ்பர அன்பு வளர்ந்து வருவதைக் கண்ட பத்மநாயகி உள்ளத்தில் மிக்க உவகை யடைந்தாள். ஆதியில் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை "உன் புத்திரன் இளவரசி பட்டத்திற்கு வரும்போது அவள்கூடச் சிம்மாதனத்தில் உட்காரும் நிலைமைக்கு வரலாகும்" என்று கூறியதை நினைத்துக்கொண்டாள்.

இராகவன் அக்கன்னிகை யிடம் பரிசுத்தமான அன்பு கொண்டவனல்ல. அவன் தாயாரைப் போல் தான் அடையக்கூடிய பதவியில் நோக்கங் கொண்டு பரிசுத்தமான அன்புடைய ஒருவன் போல் நடித்துக் கொண்டிருக்கிறுன். பாபம் அக்கன்னிகைக்குச் சூதுவாது கபடம் தெரியாது. அவள் அவன் மேல் அடங்காக் காதல் கொண்டிருக்கிறுள். இதனுல் நாம் அடையவேண்டிய பதவிக்கு இடையூறு நேரிடலாகுமே என்ற எண்ணமே அவள் மனதில் உதிக்கவில்லை. பத்மநாயகி அத்தகைய எச்சரிக்கை யடையும் படிப்பினையை யவளுக்குக் கற்பிக்கவில்லை. நாம் சாதாரணமாய் இவனை மணம்புரிந்து கொள்ளலாமென்றே இராஜ கன்னிகை கருதி யிருந்தாள்.

ஆனுல் ஒருநாள் திடீலென்று அவள் நிம்மதியான நம்பிக்கைக்குப் பெரிய இடையூறு நேர்ந்தது. ஒரு நாள்

காலே அரசன் அவளை யழைத்து நீ உன் சிறிய தந்தையின் புதல்வனாகிய அமரநாதன் இராஜகுமாரனை மணம் புரிந்து கொள்ளவேண்டும். விவாகம் சீக்கிரத்தில் நடைபெற வேண்டியதற்குத் தக்க ஏற்பாடுகளனைத்தும் செய்யப்படும் என்று கூறினர். இச்சங்கதியை யறிந்ததும் இராஜகுமாரி மிக்க மனத்துயரடைந்தாள். பத்மநாயகியும் டாக்டரும் பேரிடி விழுந்தவர்கள்போலானார்கள். இராகவன் மிக்க மனக்கலக்கமடைந்தான். திடீலென்று அரசன் இப்படிச் செய்யத் துணிந்ததன் காரணம் பின் வருமாறு.

அரசன் தன் மூத்த சகோதரனான குரூரசேனன் அடையவேண்டிய பட்டத்தையே துராக்கிரதமாய் அபகரித்துக்கொண்டு அரசனாய் இருந்து வருகிறான். இப்போது வயோதிககாலம் நெருங்கிவிடவே, சீக்கிரத்தில் தென்புலத்தான் கரத்தில் சிக்கிக்கொள்வோமே, அப்போது இப்பாபத்திற்கு எத்தகைய தண்டனை கிடைக்குமோவென அஞ்சி, இப்போதே யிதற்கொரு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்து, தன் குலகுருவிற்கு அதைப்பற்றி எழுதினான். அக்குரு இவனுடைய சகோதரன் குடும்பத்தாரிடம் அன்புடையவர். ஆகையால் இந்த அரசனுடைய அக்கிரமச் செய்கை தெரிந்ததே, அவர் "உன் தமையனுடைய இரண்டாவது புத்திரனாகிய அமரநாதனுக்கு, உன் தம்பியின் புத்திரியை மணம்செய்வித்து அவளோடுகூட அவன் சிம்மாதனத்தில் அமரும்படி செய்வாயேல் நீ உன் தமையனுக்குச் செய்த துரோகத்திற்குப் பரிகாரமாகும். நீ யுடனே யப்படிச் செய்யத் தவறினால் உன்னை மதப்பிரஷ்டம் செய்துவிடுவோம்" என்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்துவிட்டார்.

அந்தோ! அரசன் இவ் விவகாரம் இப்படி முடிந்துவிடுமென்று கனவிலும் கருதியவனல்ல. எந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்காவது யாத்திரைபோதல், காணிக்கை செலுத்தல், ஏதேனும் கைங்கரியம் செய்தல் முதலிய ஏதேனு மொரு கட்டளை செய்வார் என்று கருதி யிருந்தார். இப்போது தானே வலையில் சிக்கிக்கொண்டமாதிரி யாயிற்று. அவனொன்று கருதக் கடவுளொன்றாய் முடித்துவிட்டார்.

இதனால் பத்மநாயகியும், தங்கவேலுப்பிள்ளையும் அரசனிடம் எவ்வளவு பிரயத்தனப்பட்டும், ஜீவரத்னம் இராஜகுமாரி என்ன அழுதும், அரசன் மனம் திரும்பவில்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டுமே பத்மநாயகி, டாக்டர் இவர்கள் ஜபம் பலிக்கவில்லை. உண்மையில் அரசனுக்கும் அந்த ஏற்பாடு பிரியமில்லை. ஆனால், குருவின் கட்டளையை மீறி நடந்தால் பெரிய அவமானம் நேரிடுமாதலாலேயே அரசன் அதற்குச் சம்மதிக்க வேண்டியதாயிருந்தது. பத்மநாயகி இராஜகுமாரிக்குத் தந்திரமான புத்திமதிகளைக் கூறினாள். அவள் கூறிய போதனையின் தந்திரசாமார்த்தியம் கதையின் போக்கால் கூடிய சீக்கிரத்தில் விளங்கும். அதனால் இராஜகுமாரி தன் துயரத்தைத் தனக்குள்ளேயே யடக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் தான் மணம்புரியப்போகும் அமரநாதன் இராஜகுமாரன்மேல் அவளுக்கு முதலில் இருந்த வெறுப்பு அதிகரித்துக்கொண்டே யிருந்தது.

கடைசியில் அவர்களிருவருக்கும் திருமணம் நடந்துவிட்டது. ஆனால் ஜீவரத்னம் தன் கணவன் சகவாசத்தைவிட்டுவிட்டு எந்நேரமும் இராகவன் சகவாசத்திலேயே இருக்கத் தொடங்கினாள். இதைக் கவனித்துக்கொண்டிருந்த பத்மநாயகிச் சீமாட்டி மிக்க படுமோசமான

சூழ்ச்சி செய்தாள். அதாவது இராஜ குமாரி தன் கற்பில் தவறிவிட்டால் பூரணமாய்த் தன்கையில் சிக்கிக் கொள்வாள், அப்புறம் அவள் பட்டத்திற்கு வந்துவிட்டால் நம் இஷ்டப்படி நடக்கும்படி நாம் ஆட்டலாம் என்பதே அவள் கருத்து. ஆகையால் அவள் இராஜ குமாரிக்கு "குழந்தாய்! நீ யேன் வியாகூலப்படுகிறாய். இந்த உலகம் அக்கிரமமானது. காலத்திற்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டும். உனக்கு வெறுப்பாகிய புருடனுக்கு உன்னை மணம் செய்வித்ததால் மணச்சடங்கு காலத்தில் நீ கொடுத்த வாக்குத்தத்தம் மனப்பூர்வமானதல்ல. அப்படிப்பட்ட வாக்குத்தத்தைத் தவறி நடப்பது ஒரு போதும் பாதகமாகாது. நீ வியாகூலத்தோடிருப்பதைக் காண்பது என் மனதிற்கு மிக்க வேதனையை யளிக்கிறது. நீ உனக்குப் பிரியமான சுகத்தை யனுபவித்துக்கொண்டு சந்தோஷமாயிருந்தால் அப்போதுதான் என் மனம் வியாகூல மற்று நிம்மதியாயிருக்கும்" என்று இத்தகையச் சதிக்கார புத்திமதிகளைக் கூறினாள்.

இராஜ குமாரிக்கு இத்தகைய சூதான யோசனைகளும் கபடசிந்தனைகளும் சற்றேனும் தெரியாது. பத்மநாயகி தன் மேல் மிக்க அன்புடையவளென்றும் உண்மையான நட்புடையவளென்றும் அக்கன்னிகை கருதிக் கொண்டிருக்கிறாள்.

இத்தகைய நயவஞ்சக போதனையில் சிக்கிய இராஜ குமாரி, உலக அனுபவம் சற்றும் அறியாதவளானதால், இராகவன் மேல் தான் கொண்டிருக்கும் காதலால் உண்டாகிய ஆவலைத் தணித்துக்கொள்ளத் துணிந்துவிட்டாள். அந்தோ! அது முதல் நயவஞ்சகப்பேயாகிய பத்மநாயகியின் கையில் பூரணமாய்ச் சிக்கிக்கொண்டாள். அவள் மறுநாள் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையைச் சந்தித்தபோது,

"நமது சூழ்ச்சி நிறைவேறி விட்டது. இனி இராணியாய் வரப்போகும் ஆசாமி நமது கையில் பூரணமாய்ச் சிக்கிக்கொண்டாள்'' என்று சந்தோஷத்தோடு நவின்றாள்.

இப்படுமோசகரமான சூதுக்கு ஆதிமுதல் உடந்தையாயிருந்த டாக்டர் "சரி, இனி அவள் எவ்வளவு சீக்கிரத்தில் பட்டத்திற்கு வருகிறுளோ, அவ்வளவும் நமது காரியங்களுக்கு நலமே'' என்று கூறிக்கொண்டே அவளை யொருவிதக்குறிப்பாய் நோக்கினன். பத்மநாயகி ஆம் என்று தீர்மானித்ததோடு "ஏனெனில் அரசன் வரவரக் குருவுக்கு அதிகமாய்ப் பயப்படுகிறுர். அதனுல் நமது செல்வாக்குக்கு இடையூறு நேரிடும்போ லிருக்கிறது. ஆகையால் அவர் இளவயதுடைய இளவரசிக்கு இடத்தை விட வேண்டியதே.'' என்றுள்.

டாக்டர்:—"சரி நம்மிருவருடைய அபிப்பிராயமும் தீர்மானமும் ஒத்தே யிருக்கின்றன. இதைப்பற்றி யின்னம் யோசிக்கவேண்டிய அவசியமே யில்லை'' என்று குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டே கூறி விட்டு விடை பெற்றுச் சென்றுன்.

இச்சம்பவம் நடந்த போது நம் கதை தொடங்கிப் பதினெட்டு வருடங்களாயின. ஆகையால் இராகவனுக்கு இருபத்தி நான்கு வயதும், இராஜ குமாரிக்குப் பதினெட்டு வயதும் ஆயிற்று.

9-வது அத்தியாயம்

அரசனைக்கொல்ல ஆலோசனை—கள்ளக்காதலர்—கணவன் கோபம்—டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் தந்திரமான கொலை—அரசரின் முடிவுகாலம்—மரண சாசனங்களைப் பற்றிய ஏற்பாடுகள்

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த இரண்டாவது நாள் இரவு சுமார் பத்து மணியிருக்கும். அப்போது பத்மநாயகி தன் படுக்கை யறையிலுள்ள மிக்க நேர்த்தியான ஒரு தந்தத்தால் செய்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு பட்டினால் செய்யப்பட்டிருந்த பூவேலையைப் பார்த்துக்கொண் டிருப்பவள்போ லிருந்தாள். ஆனால் உண்மையில் அவள் அறையின் சாளரத்தருகில் நின்று சம்பாஷித்துக்கொண் டிருக்கும் இராகவனையும் இராஜ குமாரியையும் கவனித்துக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் அறையின் கதவு திறக்கப்பட்டதும் தங்கவேலுப்பிள்ளை மெதுவாய் அறைக்குள் வருவதை இராகவன் மட்டும் கண்டான். ஜீவரத்னம் தன் கள்ளக் காதலனோடிருக்கும் ஆனந்தத்தில் எதையும் கவனிக்க வில்லை. டாக்டர் மெதுவாய்ப் பத்மநாயகி யருகில் வந்துட்கார்ந்து "ஜீவரத்னம் ஏதோ இன்று தன் காதற் சுகத்திலேயே நெடுநேரமா யிருந்துவிட்டதுபோ லிருக்கிறது." என்றார். பத்மநாயகி "அவள் இராகவன் மேல் வைத்திருக்கும் அன்பு அப்படி யிருக்கிறது. ஆனால் தாங்கள் ஏன் இந்நேரம் சென்று வந்தீர்கள். ஒரு மணி நேரத்திற்கு முன்பே வந்திருக்கவேண்டுமே" என்றாள். டாக்டர் அவளை யொருவிதக்குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டே

"அரசர் கொஞ்சம் அசௌக்கிய முற்றிருக்கிறார். இராணியும், துஷ்டகேதுவும் அவரருகில் காத்துக்கொண் டிருக்கிறார்கள். அப்படி யிருக்க நான் வந்து விட்டால் ஒழுங்காகத்தோன்று தல்லவா?" என்றார்.

பத்மநாயகி "அப்படியாயின் தாங்கள் தங்கியிருந்து வந்ததுதான் சரியானது. பகற்போஜனத்தில் தாங்கள் கலந்து விட்ட அந்த மருந்து இதற்குள்ளாகவே வியாதியை யுண்டாக்கி விட்டதாக்கும்—அபாயகரமான வியாதியோ?" என்று ஆவலோடு கேட்டாள். டாக்டர், "வியாதி தான்; இன்னும் அபாயகரமான நிலைமை வரவில்லை" என்றார்.

பத்ம:—ஆனால் இன்னும் முடிவான வேலை செய்யவேண்டிய திருக்கிறது. தங்களுக்கு அவ்வளவு சாமர்த்தியம் போதாதா?

டாக்டர்:—எனக்குத் தெரியாத இரகசியம் இரசாயன சாத்திரத்திலில்லை. எத்தனைவிதப் பாஷாணங்கள் உற்பத்தி செய்யலாகுமோ அத்தனையும் தெரியும். ஆனால் இந்த அரசன் அவ்வழியாய் மரிக்கலாகாது. ஏனெனில் எத்தகைய பாஷாணம் உள்ளுக்குக் கொடுத்தாலும் சவம் வாசனை யூட்டப்படுவதற்காக அதனுட்கருவிகள் எடுக்கப்படும்போது தீனிப்பையில் கொஞ்சமேனும் பாஷாணத்தின் அடையாளம் இருக்கும். உடனே அரசன் பாஷாணத்தால் கொல்லப்பட்டானென்று நாடெங்கும் குழப்பமுண்டாகிக் கலகம் நேரிடும்.

பத்ம:—ஆ! ஆம் ஆம். இந்த யோசனை யென் மனதிற் படவில்லை. ஆயினும் எப்படியும் அரசன் ஒழிய வேண்டுமே, அதற் கெப்படி வழி?

டாக்டர்:—அதற்கு வழி பழைய வழியே. அதாவது

நாம் முன் அரசனை உயிர்ப்பித்த வழியே. ஆனால் அப்போது இரத்தம் மட்டும் அவன் தேகத்தில் ஏற்றப்பட்டது. இப்போது அந்த இரத்தத்தில் கொஞ்சம் பாஷாணமும் கலக்கப்படவேண்டும். அவ்வளவே வித்தியாசம்.

பத்மநாயகி:—தெரிந்து கொண்டேன். எப்போது இதைச் செய்வது?

டாக்டர்:—நாளை இரவிற்கு. அதற்கிடையில் நான் இராணிக்கு இரகசியமாய் நாம் முன்பு அரசனை யாபத்தினின்றும் காப்பாற்றிய மார்க்கம் இன்னதென்று கூறி, இப்போதும் அதே வியாதி ஆரம்பமாவதால் சீக்கிரம் அச்சிகிச்சை செய்து விட்டால் பிழைப்பார் என்று கூறி இராணி அதற்குச் சம்மதிக்கும்படி செய்து விடுகிறேன். அச்சமயம் இராணியையும் எதிரில் இருக்கும்படி செய்கிறேன். அப்போது ஒருவரும் சந்தேகிக்கத் துணியார்கள்.

பத்ம:—ஆம். துஷ்டகேது அரசனிட மிருந்தானே, அவன் அய்யப்படானே?

டாக்டர்:—"பட்டாற்பட்டுக்கொண்டு போகட்டும். அவனுயிரே நம்கையிலிருக்கிறது. அப்படி யவன் பிரஸ்தாபித்தல் உடனே அவன் என்னிடம் கூறிய அந்தச் சங்கதியை வெளிப்படுத்தி அவனே அரசனைக் கொன்றவன் என்று ருசுப்படுத்தி விடுவேன்" என்றான்.

பத்மநாயகி மிக்க சந்தோஷமடைந்து, "ஆம் அவனினும் நமக்கு அதிக பல மிருக்கிறது. அரசன் போய்விட்டால் பிறகு நாமே இராஜ்ஜிய பரிபாலனம் செய்வது போல்தான்" என்று சாளரத்தருகில் நிற்கும் இராஜகுமாரியைக் குறிப்பாய் நோக்கினாள்.

அதே நிமிடம் அறையின் கதவு திறக்கப்பட்டதும்

அமரநாதன் கையில் பிடித்த வாளோடு கோபாக்கிராந்த ளுக அறைக்குள் பாய்ந்து தன் மனைவியாகிய ஜீவரத்னத் தினருகிற் சென்று "ஏ கள்ளி! இப்போது உன் கள்ளக் காதலனோடு கூட இருக்க நேரில் கண்டு விட்டேன்" என்றான். இராஜ குமாரி திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்து "அய்யோ ஈதென்ன அக்கிரமம்! அபாண்டமா என் மேல் கூறத்துணிகிறாய்?" என்று கோபத்தோடு கேட்டாள்.

அமரநாதன் "ஓகோ! எந்நேரமும் புருஷனை விட்டுப்பிரிந்திருப்பது மன்னியில் அன்னிய விட புருடனிடமே கூடிக்கொண்டிருக்கும் மனைவியைக் கணவன் கண்டித்துக் கேட்பது அக்கிரமமாவென்று இனித்தான் விசாரிக்கவேண்டும்" என்றான்.

அருகிலிருந்த இராகவன் அவன் எதிரில் வந்து நின்று கோபத்தோடு "இது என் தாயாரின் அறை நீ உடனே இதை விட்டுப்போ வெளியில்" என்றான்.

அதற்குள் உட்கார்ந்திருந்த பத்மநாயகியும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் துரிதமாய்ச் சென்று அவர்களருகில் நின்றார்கள்: டாக்டர் அமரநாதனை நோக்கி "தாங்கள் இங்கு குழப்பம் செய்வது ஒழுங்கல்ல—தங்கள் அறைக்குச் செல்லுங்கள்" என்றான். அமரநாதன் கோபத்தோடு "உனக்கு இதிலென்ன சம்பந்தம்? யார் உன்னைக் கூப்பிட்டார்கள். நீ யுன் வேலையைக்கவனி" என்று கூறிவிட்டு, இராகவனை நோக்கி "இராகவா! நீ தைரியசாலியாயின் உன் வாளை யுருவிக்கொண்டு புறப்படு பார்ப்போம்" என்றான்.

இராகவன் "என்ன? தைரியமா?" என்று உடனே தன் வாளை யுருவிக்கொண்டு அவன் எதிரில் வந்து நின்

ளுன். இருவருக்கும் யுத்தம் நேரிடுமென்பதை யறிந்த டாக்டர் அமரநாதனை நோக்கி "நீர் உடனே கத்தியை உறையிற் போட்டுக்கொண்டு உம்முடைய அறைக்கு உடனே போகவேண்டும்" என்று கூறினர். அமரநாதன் பின்னும் கோபமடைந்து "என்ன கூறினய்? கட்டளை யிடுகிருயா? எந்த அதிகாரத்தால் நீ எனக்கு இடுகிருய்?" என்ருன்.

டாக்டர் உடனே அவன் அருகிற்சென்று "எந்த அதிகாரத்தாலா? கூறுகிறேன் கேள்" என்று அவன் செவியருகிற் குனிந்து என்னவோ இரண்டொரு வார்த்தைகள் குசு குசு வென்று கூறினர். உடனே அமரநாதன் பேரிடி விழுந்தவன்போலாய்விட்டான். அவன் முகம் சவம் போல் வெளுத்து விட்டதோடு கரத்திலிருந்த கத்தி கையினின்றும் நழுவியது. அவன் ஆவி சோர்ந்து தள்ளாடினன். பிறகு இரண்டொரு வினடிகளுக்குள் சற்று சமாளித்துக்கொண்டு "இந்த இரகசியத்தை யாரிடமும் கூறிவிடாதே"யென்று வேண்டிக்கொள்பவன்போல் டாக்டரை இரக்கமான பார்வையாய் நோக்கிவிட்டுத் தட்டென்று அறையை விட்டுச்சென்ருன்.

இச்சம்பவத்தைக்கண்ட மற்ற மூவரும் மிக்க வியப்படைந்தார்கள். பத்மநாயகி டாக்டரை நோக்கி "அதென்ன மந்திரம்? அதைக்கேட்டதும் அவன் கருடனைக்கண்ட நாகம்போல் ஆவி யொடுங்கிவிட்டானே" என்ருள். டாக்டர் "அது ஒரு பயங்கர மந்திரமே. ஆனல் அதைப்பற்றி இப்போது பேசவேண்டிய அவசியமில்லை. அதனல் உண்டாகும் பலனைப்பார்த்துக்கொண்டீர்களல்லவோ. அவ்வளவோடிருக்கட்டும்" என்று கூறிவிட்டு இராஜ குமாரியை நோக்கி "அம்மா! அமரநாதன் இனி யுமது விஷயத்தில் எள்ளளவும் தலையிடவே

மாட்டான் என்று பூரணமாய் நம்பிக்கொள்ளும்'' என்ருர்.

ஜீவரத்னம் இம்மொழிகளைக் கேட்டுச் சற்று நாணமடைந்தாலும் உள்ளத்தில் மிக்க சந்தோஷமடைந்தாள்.

* * * * *

மறுநாள் இரவு பதிஞெரு மணிக்கு அரசருடைய அறை மெதுவாய்த் திறக்கப்பட்டதும் பத்மநாயகி, டாக்டர், இராணி, மூவரும் மெதுவாய் உள்ளே நுழைந்தார்கள். அரசருக்கு நித்திரை மருந்தளிக்கப்பட்டிருந்ததால் அவர் நித்திரையிலிருக்கிருர். டாக்டர் தன் கருவியையெடுத்துச் சுத்திசெய்து உபயோகிக்க அதைச் சரி செய்துகொண் டிருந்தார்.

அச்சமயம் இராணி பத்மநாயகியைச் சமிக்கையாயழைத்துக்கொண்டு எட்டவிருக்கும் சாளரத்தருகில் சென்று அவளை நோக்கி,

"என் பிரியமுள்ள பத்மநாயகிச் சீமாட்டியே! சுமார் பதினேழு வருடங்களுக்கு முன் என்பர்த்தாவாகிய அரசருடைய பிராணனை அபூர்வமான விதமாய் நமது டாக்டர் காப்பாற்றியபோது நீ செய்த அருமையான உபகாரத்தைப்பற்றிச் சில நாழிகைகளுக்கு முன்பே நான் கேள்விப்பட்டேன். இதே உதவி நீ மறுபடி யின்று செய்யப்போகிருய். நான் உனக்கு என்ன கைம்மாறு செய்வதென்று எனக்குத் தெரியவில்லை.'' என்றபோது பத்மநாயகி,

"மகாராணீ! தாங்கள் எனக்கு இதுகாறும் காட்டிவரும் அன்பே எனக்குப்போதுமானது. தாங்களல்ல நன்றி பாராட்டவேண்டியது. நான் பாராட்டவேண்டும்.'' என்ருள்.

இதற்குள் டாக்டர் ஆயத்தமாய் விட்டபடியால் இரு

வரும் அரசனுடைய மஞ்சத் தருகில் சென்றார்கள். நடந்த விஷயத்தைப்பற்றி நாம் மறுபடி விவகரிக்கவேண்டாம். முன் போலவே அரசனுடைய புயத்தில் இருக்கும் இரத் தக்குழல் துளைக்கப்பட்டு அக்கருவியின் கீழ் முனை அதில் சொருகப்பட்டது. அப்படியே பத்மநாயகியின் புயத் தில் குழலின் மேல் முனை சொருகப்பட்டு அவள் தேகத் திலுள்ள இரத்தம் அரசன் தேகத்தில் பாய்ச்சப்பட்டது. ஆனால் ஒரு சின்ன விசேஷம் மட்டும் நடந்தது. அதா வது, டாக்டர் பத்மநாயகியின் புயத்தில் அந்தக் கருவி யைக் கட்டும்போது, தன் கையில் மறைவாய் மிகச் சிறிய ஒரு புட்டியை வைத்துக்கொண்டிருந்து, அரசி காணவண் ணம் அதிலுள்ள மருந்தை அக்கருவியிலுள்ள சிறு பாத் திரத்தில் ஊற்றிவிட்டான். அப்புட்டியில் மிக்க அபாய கரமான ஒருவிதப்பாஷாணம் இருந்தது. பத்மநாயகி யின் தேகத்திலிருந்து வெளிவரும் இரத்தம் குழல் வழி சென்று அப்பாத்திரத்தில் விழுந்து பாஷாணத்தோடு கலந்தே அரசன் தேகத்தில் நுழையவேண்டும்.

பத்து நிமிடங்கள் கழிந்ததும் டாக்டர் இருவர் புயங் களிலுமிருந்து கருவியை யெடுத்துவிட்டுப் புயங்களுக்குக் கட்டுக்கட்டிவிட்டார். இராணி மறுபடி பத்மநாயகிக்கு வந்தனமளித்தாள். அதன் பிறகு பத்மநாயகி விடை பெற்றுக்கொண்டு தன் அறைக்குச் சென்றாள். டாக்டரும் இராணியும் மட்டும் அரசரிடமே இருந்தார்கள்.

போகப்போக அரசருடைய முகத்தில் ஒருவித மாறு தல் தோன்றியது. அரசன் முகத்தில் ஒருவிதச் சிவந்த பிரகாசமான நிறம் தோன்றியது. இதைக் கண்ட இராணி இது அரசன் சுகமடையும் குறியென்று சற்று சந் தோஷமடைந்தாள். டாக்டரோ தான் கொடுத்த பாஷா ணம் சரியாய் வேலைசெய்யத் தொடங்கிவிட்ட தென்று

உள்ளத்தில் சந்தோஷமடைந்தான். காலை ஐந்து மணியாயிற்று. அரசன் முகத்திலிருந்த நிறம்மாறி ஒருவித சாம்பல் நிறமுண்டாயிற்று. இதைக்கண்ட இராணி திடுக்கிட்டுப் பயமடைந்தாள். தங்கவேலுப்பிள்ளை தானும் இப்போதுதான் அக்குறிகளைக் கண்டவன்போல் இராணியை நோக்கி, மிக்க மனவருத்தமடைந்தவன் போல்,

"மகாராணி! என்ன செய்வேன்? அரசர்க்கு அபாயமான குறிகள் உண்டாகத் தொடங்கிவிட்டன. நான் அரசரை யெழுப்பிவிட வேண்டும்." என்றான். இராணி "அந்தோ! அரசர்க்கு உண்மையில் ஏதேனும் அபாயம் நேரிடுமோ. உண்மையைக் கூறிவிடும்" என்று புலம்பினாள்.

டாக்டர் "மகாராணி! நமது முயற்சிகள் பயன்படவில்லை. வியாதி மீறிவிட்டது. அரசன் இனி நெடுநேரம் பிராணனோ டிருக்கமாட்டார்" என்றார்.

இதைக்கேட்ட இராணி "அய்யோ தெய்வமே!" என்று ஆவிசோர்ந்து நாற்காலியில் சாய்ந்துவிட்டாள். டாக்டர் உடனே கார உப்புப்புட்டியை அரசன் நாசியில் காட்டினார். அரசன் மெதுவாய் விழிப்படைந்து கண்களைத்திறந்து பார்த்து இராணியிருப்பதை யறிந்துகொண்டார். இராணி தன் கணவனுக்கு நல்ல அறிவிருப்பதை யறிந்ததும் அவர் மார்பின்மேல் சாய்ந்து அழுதாள். அரசனுக்கு நாவசைக்க முடியவில்லை.

டாக்டர் உடனே அங்கிருந்த வெள்ளி மணியை யடித்ததும் ஒரு வேலைக்காரன் ஓடிவந்தான். டாக்டர் அவனை நோக்கி "உடனே இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களை இங்கழைத்துவா! நமது அரசர் இன்னும் கொஞ்ச நேரமே உயிரோடிருப்பார்" என்று கூறினார். வேலையாள் துயரத்தோடு திரும்பிச் சென்றான்.

இரண்டொரு நிமிடங்களுக்குள், ஜீவரத்னம் இராஜ

குமாரி, அமரநாதன், துஷ்டகேது, பத்மநாயகி, இராகவன், அரண்மனை யுத்தியோகஸ்தர்கள் அனைவரும் அரசன் அறைக்குள் வந்து குழுமிவிட்டார்கள். அரசன் பேச முடியாத நிலைமையிலிருப்பது மிகக் கோரமான காட்சியாயிருந்தது.

அரசன் தன் மனைவியையும் ஜீவரத்னத்தையும் ஆலிங்கனம் செய்து கொண்டார். ஜீவரத்னம் கண்ணீர்விட்டாள். அதன் பிறகு அரசர் அமரநாதனை யருகிலழைத்து ஏதோ கூறமுயன்றார். முடியவில்லை. அவர் தம்பதிகளிருவரையும் பார்த்த பார்வையால் இனியேனும் இருவரும் மனமொருமித்து வாழுங்கள் என்று கூறுவதுபோலிருந்தது. அச்சமயம் அமரநாதன் முகத்தில் மிரட்சி யடைந்த ஒருவிதக் குறியுண்டாயிற்று. அவன் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையைச் சந்தேகமான ஒரு பார்வையாய்ப் பார்த்தான்.

டாக்டரோ அதைக் கவனியாதவன்போ லிருந்துவிட்டான். அதன்பிறகு துஷ்டகேது அரசனிடம் செல்ல வழி விடுவதற்காக ஜீவரத்னமும் அமரநாதனும் சற்று எட்டவந்து விட்டார்கள். ஏனெனில் அச்சமயம் அரசர் அவனை யருகில் வரும்படி சமிக்கை செய்தார். அவன் சென்று அரசர் முன் முழங்காலிட்டுப்பணியும் சமயம், ஜீவரத்னம் தன் துயரத்தைச் சகிக்க முடியாமல் தன் கணவனிடம் தேறுதலுக்காகச் செல்வதை விட்டு இராகவன் தோளைப்பற்றிக்கொண்டு அவன் பக்கத்தில் நிற்பதையும், அவள் கணவனாகிய அமரநாதன் தூரத்திலுள்ள ஒரு ஸோபாவின்மேல் உட்கார்ந்து கொண்டு துயரத்தோடிருப்பதையும் கண்டவரசர் உளம் நொந்து, உள்ளங்கைகளின் மேல் முகத்தைக் கவிழ்ந்துகொண்டு மனோவேதனையடைந்தார்.

மறுவினடி அரசர் தலே சாய்ந்துவிட்டதைக் கண்டதே யாவரும் திடுக்கிட்டு மரம்போல் நின்றுவிட, அறையில் ஒரு ஊசி தரையில் வீழ்ந்தாலும் கேட்கக்கூடிய விதமாய் அறை முழுதும் நிர்ச்சந்தடியாய் விட்டது. டாக்டர் துரிதமாய் என்ன சிகிச்சை செய்தும் பயன்படாமல் அரசர் பரலோக மடைந்தார்.

உடனே அங்கு பெரிய கூக்குரலும் கோஷ்டமும் உண்டாய்விட்டன.

சற்றுநேரங்கழித்து அவரவர்களுடைய துக்கத்தின் ஆத்திரம் சற்று தணிவடைந்தபின் டாக்டர் அங்கிருந்த அனேவரையும் நோக்கி, "மனிதமுயற்சியால் செய்யக்கூடிய யாவும் மிக்க சிரத்தையோடு செய்யப்பட்டன வென்பதை மகாராணியவர்கள் பிரத்தியட்சமாகவே கண்டார்கள்" என்றார். அப்போது இராணி "நான் மிக்க துயரத்திலிருந்தாலும், டாக்டர் தங்கவேலுப்பிள்ளே செய்த மிக்க சாமார்த்தியமான சிகிச்சைகளே மெச்சிக்கொள்வதோடு அவருக்கு, பத்மநாயகிச் சீமாட்டி இத்தகைய ஆபத்தில் செய்த உதவிக்கும் மிக்க நன்றியுடையவளாய் இருவர்க்கும் மனமார்ந்த வந்தனம் அளிக்கிறேன்" என்றாள்.

இம்மொழிகளேக் கேட்ட அனேவரும் பத்மநாயகியும் அச்சமயம் ஏதோ டாக்டருக்கு உதவியா யிருந்தாள் என்று எண்ணிக்கொண்டார்களே யன்றி அவள் எத்தகைய விசேஷ உதவி செய்தாள் என்பது ஒருவர்க்கும் தெரியாது. இரண்டு மூன்று நிமிடம் நிர்ச்சந்தடியாகவே யிருந்தது. பிறகு அங்கு உட்கார்ந்திருந்த துஷ்டகேது எழுந்து நின்று பொதுவாய்ச் சபையைநோக்கி,

"சபையோர் நான் கூறும் இரண்டொரு வாக்கியங்களேக் கவனிக்க விரும்புகிறேன். காலஞ்சென்ற நமதரசர் தமக்குப்பின் யார் பட்டத்திற்கு வரவேண்டு மென்ப

தைப்பற்றி ஒரு மரண சாசனம் எழுதிவைத்திருப்ப தாய்த் தெரியவருகிறது. நயனபுரி இராஜ்ஜியம் ஒருநாள் கூட அரசனில்லாது அனாதைப்பிள்ளைபோ லிருக்க லாகாது. ஆகையால் நான் கூறும் ஏற்பாடாவது துரைத் தன வக்கிலாகிய வேணுநாதம்பிள்ளையும், இராஜாங்கக் காரியதரிசியும் அரசருடைய பத்திரங்களை யெல்லாம் சோதித்துப் பார்த்து இன்றுமாலை ஆறுமணிக்கே அரசன் எழுதிவைத்திருக்கும் மரண சாசனத்தை அல்லது மரண சாசனங்களை அரண்மனையில் அனைவரும் கூடும் சபையின் முன்பு பகிரங்கமாய் வாசித்துக் காட்டவேண்டுமென் பதே'' என்றான்.

இந்த ஏற்பாடு நியாயமானதாகவே தோன்றியபடி யால் ஒருவரும் அதை மறுத்து ஒன்றும் கூறவில்லை. உடனே யாவரும் அவரவர் விடுதிக்குச் சென்றார்கள். பிறகு பத்மநாயகியும் டாக்டரும் ஒரு அறையில் போய் உட்கார்ந்ததும் பத்மநாயகி டாக்டரை நோக்கி ''அந்தத் துஷ்டகேது கூறியதில் மிக்க மர்மமான ஆழ்ந்த சூழ்ச்சி ஏதோ விருக்கிறது'' என்றாள்.

டாக்டர் ''ஆம், சந்தேகமில்லை. என் மனதிலும் அதே பட்டது. ஆயினும் இராஜாங்கக் காரியதரிசி கண் டிப்பான சத்தியவான். அவனிடம் இவன் சூதுவாது செல்லாது. துரைத்தன வக்கீலாகிய வேணுநாதன் எனக்கு வேண்டியவன். என் பிரியத்திற்கு மாறாக நடக் கவேமாட்டான். ஆகையால் துஷ்டகேதுவின் காரியம் ஒருபோதும் நிறைவேறாது. ஜீவரத்னம் இராஜகுமாரியே பட்டத்திற்கு வருவாளென்பது நிச்சயம். நான் இதோ அவரிடம் செல்கிறேன்'' என்று கூறிவிட்டு உடனே புறப் பட்டார்.

10-வது அத்தியாயம்.

பண ஆசை — சதியாலோசனையும் கள்ளச் சாதனமும் — வயிரத்தை வயிரம் வெட்டுகிற அதிசயக் காட்சி.

ஆத்மநாதம் பிரபுவின் குழந்தையை வளர்ப்பதற்காக டாக்டர் மாதமாதம் பணம் வாங்கிக்கொள்ளும் ஏற்பாடாயிருப்பது துரைத்தன வக்கீல் வேணுநாதனிடமிருந்தே என்பதை நண்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறோம். அவர் டாக்டருக்கு மிக்க வேண்டியவர். டாக்டரைப்போலவே அவரும் பணத்தையே தெய்வமாய்ப் பாவிப்பவர்; முன்னோர் பொருளைத் துர்வினியோகம் செய்யும் செல்வச் சீமான்களின் வாலிபப் புத்திரர்களுக்கு அதிக வட்டிக்குப்பணம் கொடுத்துப் பொருள் சம்பாதிப்பவர். தங்கவேலுப்பிள்ளை அரண்மனையில் உத்தியோகம் செய்பவராதலின் ரொக்க லேவாதேவி செய்வது இரகசியமாகவே நடைபெறவேண்டும். ஆகையால் அவர் தன் விவகாரங்களை யெல்லாம் வேணுநாதன் மூலமாகவே நடத்தி வருகிறார். இவர்களிருவரும் பரஸ்பர அனுகூலத்திற்காக ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டவர்கள். துரைத்தன வக்கீல்கள் பலரில் ஒருவராயிருந்த வேணுநாதன் டாக்டர் சிபாரிசால் பிரதம அரண்மனை இலாயர் பதவியையடைந்தார். ஆனால் இச்சங்கதியாவது, இவர்களிருவரும் நண்பர்கள் என்ற சங்கதியாவது வெளியாகாமல் மிக்க இரகசியத்திலேயே இருந்தது.

அரண்மனையில் அரசன் சவம் இருக்கும் அறை காலி செய்யப்பட்டு, சவம் சுத்தி செய்து வாசனையூட்டி அலங்கரிக்கப் படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தும் தொடங்கப்பட்டதும், துஷ்டகேது இராஜகுமாரன் ஒரு

போர்வையை யணிந்துகொண்டு அரண்மனையினின்றும் வெளிப்பட்டுத் துரைத்தன இலாயர் வீட்டை நோக்கித் துரிதமாய்ச் சென்றான். அவன் இலாயர் இருக்கும் அறைக்குள் பிரவேசித்ததே இவனைக்கண்ட சூக்குமபுத்தி யுடைய இலாயர் ஏதோ விசேஷமிருக்கிறது என்று உணர்ந்து ஒரு ஆசனத்தை அரசகுமாரனருகில் இழுத்து அவனை யுட்காரும்படி மிக்க மரியாதையோடு உபசரித்தார்.

துஷ்டகேதுஉட்கார்ந்ததும், "இலாயரே! நான் மிக்க அவசியமான ஒருகாரியமாய் உம்மிடம் வந்தேன். அதில் உமது உதவி பூரணமாய் வேண்டியிருக்கிறது" என்றான். இலாயர் ஏதோ பெரியவிவகாரம் நடக்கவேண்டி யிருக்கிற தென்று அறிந்துகொண்டு தன் நாற்காலியை இராஜகுமா ரனருகில் இழுத்துக்கொண்டு "தங்கள் கட்டளைக்கு ஆயத் தமா யிருக்கிறேன்" என்றான். இராஜகுமாரன் உடனே தான் கொண்டுவந்த ஒரு பணப்பையை எதிரிலிருந்த மேஜைமேல் வைத்து "இதோ இதில் ஆயிரம் சவரன்க ளிருக்கின்றன. நீ என் ஏற்பாட்டிற்கு உடன்பட்டால் இன்னும் இரண்டாயிரம் பவுன்கள் உனக்கு அளிக்கப்படு வதோடு இராஜாங்கக் காரியதரிசி பதவியும் உனக்குக் கிடைக்கும். இக்காரியம் எப்படி முடிந்தாலும் இந்த ஆயிரம் பவுன்கள் உன்னுடையவைகளே" என்றான். இலாயர் தங்கள் பிரியப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன் என்றதே இராஜகுமாரன்,

"இன்னும் ஒருவார்த்தை, அதாவது இப்போது நான் கூறப்போவது ஓர் மிக்க விசேஷமான விஷயம். நீ நான் கூறுகிறபடி எனக்கு உதவிசெய்யச் சம்மதித்தால் சரி தான். அப்படிச் சம்மதிக்காவிட்டால், இச்சங்கதியைப் பற்றியாரிடமேனும் பிரஸ்தாபித்தாயோ உனக்கே ஆபத்

தாய் முடியுமென்பதை நன்றாய் அறிந்துகொள்'' என்றான். மிக்க தந்திரசாலியாகிய இலாயர் "இராஜகுமாரரே! தங்கள் வார்த்தைக்கு முன் என்போன்ற சாதாரண மனிதனாகிய ஒரு இலாயருடைய வார்த்தையை யாரேனும் நம்புவார்களோ? அந்த ஒரு விஷயமே என்னை வாய் மூடிக்கொண்டிருக்கும்படி செய்யப்போதுமானது'' என்றான்.

துஷ்டகேது "சரி, இனிச் சங்கதியைக் கூறுகிறேன். நமது அரசர் சற்று நேரத்திற்குமுன்பு இறந்துபோனார்.'' என்றதே இலாயர் திடுக்கிட்டு "ஆ இறந்துபோனாரா அரசர்! அப்படியாயின் மரணம் திடீலென்று சம்பவித்திருக்கவேண்டும்'' என்றான். இராஜகுமாரன் "அந்த விவரமெல்லாம் பேச அவகாசமில்லை. அரசர் மரணமடைந்தார். அப்பட்டத்திற்கு நான் வரவேண்டும். அதற்கு உன் உதவிவேண்டும்'' என்றான்.

இலாயர் "என் உதவியால் ஆகிறகாரியமாயின்......'' என்றதே இராஜகுமாரன்,

"ஆகா பூரணமாயாகும். இன்றைக்குச் சுமார் பதினெட்டு வருடங்களுக்குமுன் இராஜகுமாரியாகிய ஜீவரத்னம் பிறந்தபோது அரசன் தனக்குப்பின் அவளே பட்டத்தை யடையவேண்டுமென்று ஒரு மரண சாசனம் எழுதி வைத்திருக்கிறாராம். நாளைவரையில் அது இரத்து செய்யப்படவில்லையென்று கூறப்படுகிறது'' என்றபோது, இலாயர் "ஆம் ஆம் அப்படித்தான் பிரஸ்தாபம்'' என்றான்.

இராஜகுமாரன்:—"சரி இதேதினம் மாலை ஆறுமணிக்குள் அரசன் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு எழுதினதாக வேறொரு மரண சாசனம் தயாரிக்கப்படவேண்டும். அதன்படி முன் எழுதப்பட்டிருக்கும் சாசனம் இரத்து செய்யப்பட்டுப் பட்டம் எனக்கு அளிக்கப்பட்டிருக்கவேண்டும்'' என்றான்.

இப்படிமோச சங்கதியைக் கேட்ட வேணுநாதன் திடுக்கிட்டுப் பிரமித்துவிட்டான். ஆயினும் பண ஆசை யவன் மிடறைப் பிடித்துத்தள்ளவே இரண்டொரு விநாடி களில் மனச்சாட்சி கூறியதை மறந்து "இராஜகுமாரரே! தங்கள் பிரியம்போல் நடந்துகொள்ளச் சம்மதிக்கிறேன்" என்றான்.

இராஜகுமாரன் சந்தோஷமடைந்து "இதுதான் புத்திசாலித்தனமான யோசனை. நீ துரைத்தன வக்கீலாக விருந்தபடியால் அரசருடைய கையொப்பம் உனக்கு நன்றாய்த் தெரியும். நீயும் அப்பத்திரத்தில் சாக்ஷியாய்க் கையொப்பமிடவேண்டும்" என்றான். வேணுநாதன் "பிரபுவே! அவ்வாறே செய்கிறேன். நான் இரண்டுமணி நேரத்தில் பத்திரத்தின் நகலை முடித்துவிடுகிறேன். ஆனால் தாங்கள் அரசருடைய முத்திரை மோதிரத்தைக் கொண்டுவந்தீர்களோ? அதனால் முத்திரை யிட்டால்தான் பத்திரம் செல்லும். இன்றேல் அரசர் எழுதியதாக நம் பப்படமாட்டாது" என்றான்.

துஷ்டகேது "ஆகா! அதை மறந்துவிட்டேன். எனக்கு அந்த நினைப்பே வரவில்லை" என்று சற்றுநேரம் சிந்தித்துப்பிறகு "ஆயினும் அதற்காக நமது காரியம் தடைப்படலாகாது. நான்போய் அதையெப்படியேனும் கொண்டுவந்து விடுகிறேன். நீ அதற்காக ஒன்றும் சிந் திக்கவேண்டாம். நீ பத்திரத்தின் நகலையெழுதி முடிப்ப தற்குள் நான் கணையாழியைக்கொண்டுவந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டுத் துரிதமாக அங்கிருந்து புறப்பட்டான். இராஜகுமாரன் வெளியிற் சென்ற இரண்டொரு நிமிடங்க ளுக்கெல்லாம் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை வேணுநாதன் அறைக்குள் வந்தார்.

அங்கு வந்து உட்கார்ந்ததும் டாக்டர் இலாயரை

உற்று நோக்கி "துஷ்டகேது இராஜகுமாரன் இங்கு வந்து உம்மிடம் பேசிவிட்டு இப்போதுதான் செல்கிறுன். நான் எதிர் வீட்டில் மறைந்திருந்து யாவும் பார்த்தேன். முன்னுடி நமது இருவர் மனங்களும் பொருந்திவிடட்டும். அவன் ஏதோ பிரமாதமான காரியத்தைச் செய்யவே உமது உதவியை நாடிவந்தான். நீர் அவன் பட்சத்தில் வேலை செய்வதாய்ச் சம்மதித்துக்கொண்டீர். இருக்கட்டும் அது சுபாவமே. ஆனுல் நான் கூறுவதைச் சற்று கவனியும், அவன் எண்ணம் நிறைவேற வொட்டாமற் செய்ய என்னுல் கூடும். அப்படியிருப்பினும் நீர் நமது சினேகரானதால் உமக்கு அசௌகரியத்தையேனும் நஷ்டத்தையேனும் நான் உண்டாக்கலாகாது. ஆகையால் அவன் கட்சியில் வேலை செய்ய அவன் உமக்கு என்ன பரிசு தருவதாய்க் கூறியிருப்பினும் சரி. நான் அதற்கு இரண்டத்தனை தருவது நிச்சயம். நீர் என் பட்சத்தில் நின்று நான் கூறுமாறு செய்யவேண்டும். என்ன சொல்கிறீர்?" என்றுர்.

இலாயர்.—" நண்பரே! நாம் இருவரும் பழைய நண்பர்கள். நமக்குள் இருக்கும் சம்பந்தம் இரகசியமானது. அப்படி யிருக்க நான் உமது பிரியப்படி நடக்க எங்கேனும் மறுத்துக் கூறுவேனே?" என்றுர்.

டாக்டர்:—" சரி. அப்படியாயின் துஷ்டகேது என்ன கூறினுன்? நடந்த விஷயமென்ன? யாவும் கூறும்" என்றுர்.

அதன்மேல் இலாயர் இராஜகுமாரன் கூறியபடி கள்ள மரண சாசனம் வரையவேண்டியதைப்பற்றிக் கூறினுர்.

டாக்டர் யாவும் கேட்டுக்கொண்ட பிறகு அவன் உமக்கு என்ன பரிசளிப்பதாய்க் கூறினுன் என்றுர். இலாயர் "இப்போது ஆயிரம் பவுன் கொடுத்திருக்கிறுன்.

பிறகு இன்னும் இரண்டாயிரம் பவுன் கொடுப்பதோடு இராஜாங்கக் காரியதரிசி பதவியும் அளிப்பதாகக் கூறி ஞன்.'' என்ருர்.

டாக்டர் "சரி எவ்வளவாயினும் நான் சொன்ன வாக்குத் தப்பமாட்டேன். பாகூர் ஜமீன் பூமிமேல் ஆரு யிரம் பவுன் பணம் கொடுத்த அடமான பத்திரம் இருக் கிறதல்லவா, அதை உமது பேரில் மாற்றிவிடுகிறேன். துரைத்தன காரியதரிசி வேலேயும் செய்து வைப்பதோடு இராஜாங்க பொக்கிஷதார் வேலேயும் செய்து வைக்கி றேன். என்ன சொல்லுகிறீர். சம்மதந்தானு?'' என்ருர்.

இலாயர் "தங்கள் பேச்சுக்கு இரண்டாவதுண்டா. மறுபடி மறுபடி என்னைக்கேட்கவே வேண்டாம். தங் கள் பிரியப்படியே செய்வேனென்று பூரணமாய் நம் பும்'' என்ருர். டாக்டர் "சரி, பத்திரத்தின் நகலே யெழு தும். அதற்குள் நான் வீட்டிற்குச் சென்று நமது வேலைக்கு வேண்டிய இரண்டொரு சமான்களை யெடுத்துக்கொண்டு வருகிறேன்'' என்ருர். இலாயர் "செய்யுங்கள்; துஷ்ட கேது இரண்டு மணி நேரத்தில் வருவதாய்க் கூறிச் சென் றிருக்கிருன். தாங்கள் முன்னுடி வந்து விடவேண்டும்'' என்ருர். டாக்டர் "ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் ஒருமணி நேரத்திற்குள்ளாகவே வந்துவிடுவேன்'' என்று கூறி விட்டுச் சென்ருர்.

இலாயர் உடனே யுட்கார்ந்து மரண சாசனத்தை யெழுதத்தொடங்கினர். அவர் அதை யெழுதி முடித்த மறுகிமிடம் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை வந்து விட்டார். அவர் வந்ததும் இலாயர் எழுதி முடித்த பத்திரத்தைப் பார்த்து விட்டு "சரி, இனி நீர் செய்யவேண்டிய உதவி யைக் கூறுகிறேன் கவனமாகக் கேட்டுக்கொள்ளும். அதா வது இதோ இச்சிறு புட்டியிலிருக்கும் மசியால் பத்திரத்

தடியில் கையொப்பம் வைக்கவேண்டும். இதோ இந்த அரக்கினுல் அரசனுடைய கணையாழி முத்திரையைப் போடவேண்டும்'' என்று கூறிக் கொண்டே ஒரு சிறு புட்டி மசியையும் ஒரு விதச் சிகப்பு அரக்கிருந்த ஒரு தந்த டப்பியையும் இலாயரிடமளித்தார். இலாயர் அப்படியே செய்வதாய்க் கூறியபின், டாக்டர்,

''பத்திரம் எழுதி முடிந்து இராஜகுமாரன் பார்வையிட்டுத் திருப்தியடைந்த பிறகு அதை மடித்து வேருெரு கடித உறையில் போட்டு அதன்மேல் சாதாரண அரக்கு முத்திரை போட்டு விடும். மாலை ஆறுமணிக்கு யாவர் முன்பும் திறக்கப்படும் வேளையில்தான் அது வெளியில் எடுக்கப்படக்கூடியதாயிருக்கவேண்டும். நீர் யாவும் கிரமப்படி செய்ததாகவே நடிக்கவேண்டும்.'' என்றதும் இலாயர் ''நான் சாக்ஷிக் கையொப்பம் வைக்கவேண்டியதுதானே?'' என்ருர்.

டாக்டர் ''ஆம் ஆம். பிறகு மாலை ஆறுமணிக்குச் சபையில் தைரியத்தோடெழுந்து இம்மரண சாதனம் இராஜனுல் உம்மிடம் கொடுக்கப்பட்டதாய்க்கூறி, உண்மையாகவே அரசன் உம்மிடம் கொடுத்தால் எப்படிச் செய்வீரோ அப்படியே நடித்து அதைப்பிரித்து வாசிக்கத் தொடங்கும். கடைசிவரையில் துஷ்டகேது நீர் அவனுக்குச் சிநேகமாய் நடப்பதாகவே நினைக்கவேண்டும். மற்ற சங்கதிகளெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். அவனுல் உமக்கு ஏதேனும் இடையூறு நேரிடுமென்று எள்ளளவும் அஞ்சவேண்டாம்'' என்ருர்.

வேணுநாதன் தான் அவ்வாறே நடப்பதாய்க்கூறிய பின், டாக்டர் தங்கவேலுப்பிள்ளை விடைபெற்றுக் கொண்டு சென்ருர்.

* * * * *

*   *   *   *   *   *

இதற்கிடையில் துஷ்டகேது பெண்பாலாகிய ஜீவரத்னம் இராஜகுமாரி ஆளவேண்டிய இராஜ்ஜியத்தை யபகரித்துக்கொள்ள மிக்க ஆவலோடு அரண்மனைக்குள் பிரவேசித்ததும், நேராய் அரசருடைய சவம் இருக்கும் அறைக்குச்சென்றான். அச்சமயம் அந்த அறையிலிருந்து இரண்டு செவிலித்தாய்கள் வெளியில் வந்தார்கள். துஷ்டகேது அவர்களை நோக்கி "சவமிருக்கும் அறையில் யாராவதிருக்கிறார்களா?" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "அங்கு யாருமில்லை. சவம் சுத்தி செய்யப்பட்டிருக்கிறது. வாசனை யூட்டுவதற்காக ஆட்கள் போயிருக்கிறார்கள். அங்கே தீபமில்லை. நாங்கள் தீபம் கொண்டு வரச் செல்லுகின்றோம்" என்றார்கள்.

துஷ்டகேது "நான் அங்கு சென்று பிரார்த்தனை செய்யவேண்டும். நீங்கள் இருபது நிமிடங்கள் கழித்து வாருங்கள்" என்றான். அம்மாதர் அவ்வாறே சென்றனர். அதன் பிறகு இராஜ குமாரன் இருள் சூழ்ந்திருக்கும் அறைக்குள் நுழைந்ததும் அவனுக்கு ஒருவிதத் திகில் உண்டாயிற்று. ஆயினும் அவன் "சே! இதென்ன கோழைத்தனம். நமக்கு இது தகுமா. சிம்மாதனத்தைப் பெற விரும்புவோன் துணிகரத்தோடு நடக்காவிட்டால் காரியம் அனுகூலமாகுமா?" என்று தன் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு மெதுவாய்ச் சவம் இருக்கும் மஞ்சத்தைத் தடவிக்கொண்டே சென்று சவத்தைத் தொட்டான். பனிக்கட்டிபோலிருக்கும் அத்தேகத்தைத் தொட்டதும் அவன் தேகத்தில் நடுக்கமுண்டாயிற்று. சற்று நேரத்திற்குள் அதையும் சமாளித்துக்கொண்டு பிரேதத்தின் வலக்கையிலிருந்த கணையாழியைக் கழற்றிக் கொண்டு திரும்பினான். அச்சமயம் எதுவோ ஒரு பிசாசு

தன்னைத்துரத்தி வருவதுபோலிருந்தது. ஆகையால் நாவுலர்ந்து நெஞ்சு வறண்டு துரிதமாய் அந்த அறையைவிட்டு வெளிவந்ததும் சோர்ந்து பூமியில் உட்கார்ந்துவிட்டான். அவனுக்கு நடந்ததெல்லாம் கனவு போல் தோன்றியது. தன் ஜேபியிலிருந்த கணையாழியைப் பன்முறைதொட்டுப் பார்த்தான்.

துஷ்டகேது உடனே அரண்மனையை விட்டுப் புறப்பட்டுத் துரிதமாய் வேணுநாதன் வீட்டை நோக்கிச்சென்றான். இவன் முகவிகாரத்தைக் கண்ட இலாயர் எல்லாச் சங்கதிகளும் பகிரங்கமாய் விட்டது போலிருக்கிறதென்று பயந்து மிக்க கலவரமடைந்து "என்ன சங்கதி?" என்று தடுமாற்றத்தோடு கேட்டான். துஷ்டகேது "ஒன்றும் விசேஷமில்லை. எல்லாம் அனுகூலமே. உன் வேலை யெவ்வளவு முடிந்தது" என்றான்.

இலாயர் "நான் பத்திரத்தின் நகலும் அசலும் தயாராய் வரைந்து வைத்திருக்கிறேன்" என்றுகூறிப் பத்திரத்தை இராஜகுமாரனிடம் அளித்தான். இராஜகுமாரன் அதை வாசித்துப்பார்த்து, "பேஷ்! மிக்க சமார்த்தியமாய் எழுதியிருக்கிறாய். ஆ! ஜீவரத்னம் இராஜ குமாரி சிம்மாதனத்தையிழந்து விட்டதற்கு ஈடாக முப்பது இலட்சம் பவுன் அவளுக்குக் கொடுக்கப்படவேண்டும், மிகவும் சரி. ஆகா! கையொப்பம் அரசருடைய கையொப்பம் என்றே யாவரும் கருதவேண்டும். எப்படிப்பட்ட நிபுணனும் இதைப்பற்றிச் சந்தேகிக்க முடியாது. நமது காரியம் பூரண ஜெயமடைந்தமாதிரியே. தடையில்லை. ஆனால் முத்திரை யொன்று தான் குறை. இந்தா அரசனுடைய கணையாழி. முத்திரை யில்லா விட்டால் பத்திரம் சட்டப்படி செல்லாது." என்று கூறிக்கொண்டே தான் கொணர்ந்த கணையாழியை இலாயரிடம் அளித்தான்.

இலாயர் உடனே தங்கவேலுப்பிள்ளை கொடுத்த அரக்கினுல் முத்திரை போட்டார். அதன் பிறகு துஷ்டகேதுவே தான் ஜெயமடைய வேண்டுமென்ற ஆத்திரத்தால், இலாயரை நோக்கி "இதை யொரு கடித உறையில் போட்டு வேறே ஒரு அரக்கு முத்திரை போட்டு விடும். ஏனெனில் அரசர் உம்மிடம் கொடுத்தது ஒருவராலும் பிரிக்கப்படவில்லை யென்று யாவரும் நம்பவேண்டும்" என்றுன். இது டாக்டர் கூறிய ஏற்பாடே யாகையால் இலாயர் சந்தோஷத்தோடு உடனே அவ்வாறு செய்து விட்டார்.

இராஜ குமாரன் மோதிரத்தை வாங்கிப் பத்திரமாய் உள் ஜேபியில் வைத்துக்கொண்டு, இலாயரை நோக்கி "நீர் ஒன்று செய்யவேண்டும். அதாவது இராஜாங்கக் காரியதரிசியிடம் சென்று, அரசன் மூன்று மாதங்களுக்கு முன் ஒரு மரணசாசனம் எழுதி யும்மிடம் அளித்திருப்பதாகவும், அதன் விவரம் உமக்குத் தெரிந்திருந்தாலும் கடைசிவரையில் ஒருவருக்கும் வெளியிடலாகாதென்று அரசர் கட்டளை யிட்டபடி நீர் யாருக்கும் கூறவில்லை யென்றும், மாலை முதலில் எழுதப்பட்ட பத்திரம் வாசிக்கப் பட்டதே இதை நீ பகிரங்க சபையில் வாசித்துக்காட்டப் போவதாகவும் கூறிவிடவேண்டும்." என்றுன்.

இலாயர் வேணுநாதன் "தங்கள் கட்டளைப்படியே தவருமற் செய்வேன். மாலைப் பொழுதமர்வதற்குள் தங்களை மகாராஜா வென்று சந்தோஷத்தோடழைக்கும் புண்ணியம் பெறுவேன்" என்றுன். இராஜ குமாரன் "ஆ! நானும் உன்னை இராஜாங்கக்காரியதரிசி யென்ற கௌரவப்பெயரா லழைக்கும் சந்தோஷத்தைப் பெறுவேன்" என்று கூறி விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

ஆனால் இப்போது நேராய் அரண்மனைக்குச் செல்லாமல் தன் வாசஸ்தலத்திற்குச் சென்றான்.

அன்று காலையே அரசன் மரித்த சங்கதி ஊரெங்கும் பரவிவிட்டது. சிலர் இராஜகுமாரி மட்டுமே அரசாள்வாள் என்றும், சிலர் அவளும் அவள் கணவனும் ஒன்று சேர்ந்து அரசாள்வார்களென்றும், சிலர் இல்லை யில்லை அரசாளப்பிரத்தியேகமான சபை யேற்படுத்தப்படுமென்றும் பலவாறு பேசிக்கொண்டார்கள். ஆனால் சூக்கும புத்தியுடைய சிலர் துஷ்டகேது இராஜகுமாரன் விவகாரங்கள் அவ்வளவு சாதாரணமாய் நடைபெறும்படி விட்டு விட மாட்டான் என்றார்கள்.

இதனால் ஜனங்கள் பலவிதமான கலவரங்களடைந்து என்ன நடக்குமோ! எப்படியாகுமோ! என்று பீதியுற்றார்கள். ஆகையால் மாலை முன்னடியாகவே அரண்மனையெதிரில் ஜனங்கள் மிக்க ஆவலோடு பெருங்கூட்டமாய்க் கூடிவிட்டார்கள். இதற்கிடையில் இன்னொரு கலவரமான வதந்தி யுண்டாய்விட்டது. இரண்டு மரண சாசனங்களிருக்கின்றன வென்றும், ஒன்று பதினெட்டு வருடங்களுக்கு முன் எழுதப்பட்டுத் துரைத்தன காரியதரிசியிடமிருக்கிறதென்றும், மற்றொன்று மூன்று மாதங்களுக்கு முன்னான் எழுதப்பட்டு இராஜாங்கலாயரிடம் இருக்கிறதென்றும், இரண்டும் மாலை சபையின் முன் வாசித்துக் காட்டப்படுமென்றும் பெரிய வதந்தி யுண்டாயிற்று. ஆனால் ஜீவரத்னம் இதற்கெல்லாம் பயப்படவில்லை. ஏனெனில், டாக்டர் தங்கவேலுப்பிள்ளை விவரமாய் எல்லாச் சங்கதிகளும் பத்மநாயகியினிடம் கூறி யிருப்பதால் அவள் இராஜகுமாரிக்கும் இராகவனுக்கும், துஷ்டகேதுவின் சூதான தந்திரங்கள் ஒன்றுமே பலிக்காதென்று கூறியிருக்கிறாள்.

—

மாலை ஆறுமணி யடிக்கக் கால்மணி யிருக்கையில், அரண்மனையின் ஒரு பெரிய கூடத்திற்குச் செல்லும் வழியிலுள்ள கதவுகள் திறக்கப்பட்டதும், மந்திரி பிரதானிகளும், செல்வச்சீமான்களும், பெரிய உத்தியோகஸ்தர்கள், சீமாட்டிகள் முதலியவர்களும் துக்கவுடையோடு அக் கூடத்தில் வந்து குழுமினூர்கள். உடனே சபாமண்டபம் திறக்கப்பட்டது. அம்மண்டபத்தில்சாதாரணமாயுள்ள அலங்காரங்களனைத்தும் கறுப்புப்பட்டுத் திரைச்சீலைகளால் மறைக்கப்பட்டிருந்தன.

மண்டபத்தின் ஓர் பக்கம் ஒரு சிம்மாதனமிருந்தது. நவரத்தினங்களிழைத்து அமைக்கப்பட்ட அச் சிம்மாதனமும் கறுப்புப் பட்டுச் சீலையால் மூடப்பட்டிருந்தது. அதன் எதிரில் சற்று தூரத்தில் ஒரு பெரிய மேஜைபோடப்பட்டு அதைச் சுற்றிப் பெரிய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவை இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காக அமைக்கப்பட்டவை. அவற்றின் இருபுறங்களிலும் வரிசை வரிசையாய் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மணி ஆறடிக்கும் சமயம் மந்திரிகள் பிரதானிகள் அரண்மனை யுத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் வந்து பக்கங்களிலுள்ள நாற்காலிகளி லமர்ந்தார்கள். அதன் பிறகு துஷ்டகேது இராஜகுமாரனும் அவனைச் சேர்ந்த நான்கைந்து பேர்களும் வந்தார்கள். இராஜகுமாரன் பெரிய நாற்காலிகளிலொன்றில் உட்கார்ந்து கொண்டான். அவனைச் சேர்ந்தவர் சற்று பின்னுலிருந்த நாற்காலிகளி லமர்ந்தார்கள். இரண்டொரு நிமிடங்கள் கழித்து இராணியும், ஜீவரத்னம் இராஜகுமாரியும், அவள் கணவன் அமரநாதம் பிரபுவும், பத்மநாயகி, இராகவன், டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் வந்தார்கள். இவர்களில் டாக்டரும் இராகவனும் மட்டும் மந்திரிகள் இருக்கும்

ஆசனங்களுக்குப் பக்கத்திலுள்ள ஆசனங்களில் ஒருவர் பக்கத்திலொருவரா யமர்ந்தார்கள். மற்ற நால்வரும் பெரிய நாற்காலிகளி லுட்கார்ந்தார்கள். பத்மநாயகி இராஜகுமாரிக்கு உபாத்தினி யென்ற பதவியால் அங்கு இடம் பெற்ருள். இராஜகுமாரியின் தோழியாகிய சித்தி ராங்கியும் அவர்களோடுகூட வந்திருந்தாள். அவள் அரண் மனையைச்சேர்ந்த மற்ற தோழிப்பெண்களோடு உட்கார்ந் தாள்.

11-வது அத்தியாயம்.

மெய்யானமரண சாசனமும் பொய்மரண சாசனமும்—டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் தந்திர சாமார்த் தியம்—மோச எண்ணங்கொண்ட துஷ்டகேது தக்க தண்டனை யடைதல்—இராகவன் கெட்டஎண்ணம்—பொருமைக்காரர் இருவரும் ஒன்று சேர்ந்து சதியாலோசனை செய்தல்—சந்திக்கக்கூடாதவர்கள் சந்தித்தல்.

ஐந்து நிமிடங்கள் கழித்ததும், துரைத்தனப் பிரதம இலாயராகிய வேணுநாதம்பிள்ளையும், இராஜாங் கக் காரியதரிசியாகிய பிரபுவும், சபைக்குள் பிரவேசித் தார்கள். அவர்கள் உத்தியோக அந்தஸ்திற்குத் தக்க படி இரண்டுபேர் கரங்களில் வெள்ளிச் செங்கோல்களை யேந்திக்கொண்டு அவர்கள் முன்னே நடந்தார்கள். அவர்கள் இருவர் கரங்களிலும் ஒவ்வொரு அரக்கு முத் திரையிட்ட கடித உறையிருந்தது. சபையிலுள்ள எல் லோர் கண்களும் ஏககாலத்தில் அந்த உறைகள் மேல் நாட்டம் வைத்தன. அவர்கள் பெரிய நாற்காலிகளில்

உட்கார்ந்தார்கள். அச்சமயம் ஒருஊசி தரையில் விழுந்தாலும் சத்தம் கேட்கக்கூடிய அவ்வளவு நிர்ச்சந்தடியாயிருந்தது. துஷ்டகேது இராஜ குமாரனுடைய மனதில் எவ்வளவோ சந்தோஷமும் ஆவலும், கொஞ்சக் கலக்கமும், இன்னும் பலவித உணர்ச்சிகளுமிருந்தாலும், அவன் மிக்க சாமார்த்தியத்தோடு தன் சுபாவமான கோபமும் கடுகடுப்புமான பார்வையாலும் சுளித்த முகத்தாலும் யாவையும் மறைத்துக்கொண்டு ஒன்று மறியாதவன் போலிருந்தான். பத்மநாயகி, இராஜ கன்னிகை, இராகவன் மூவர்க்கும் நம்பிக்கையிருந்தாலும் ஒரு சமயம் எப்படி யாய்விடுமோவென்று உள்ளே சற்று கலவரம் மட்டுமிருந்தது. இராணிக்கும் அமரநாதனுக்கும் பூரணக் கலக்கமே. பத்மநாயகிக்குமட்டும் டாக்டர் மூலமாய், நடந்த சூதும் எதிர்ச் சூதும் யாவும் தெரியுமாகையால் சற்று தைரியமாகவே யிருந்தது.

இராஜாங்கக் காரியதரிசி எழுந்து நின்று தன் கரத்திலிருக்கும் கடிதவுறையின்மே லிருந்த முத்திரையையுடைத்து உறைக்குள் இருந்த பத்திரத்தை வெளியிலெடுத்து யாவர்க்கும் காட்டி, "சபையோர்களே! இதோ பாருங்கள் காலஞ்சென்ற நமது அரசர் எழுதி வைத்த மரண சாசனம். இது இராஜகுமாரியாகிய கனம் பொருந்திய ஜீவரத்னம் சீமாட்டி யவர்கள் பிறந்த மூன்றுவது மாதம் வரையப்பட்டு அரசரால் என் வசம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. இப்போது இதை வாசித்து இதிலுள்ள நமது அரசருடைய கட்டளைக்கு, அனைவரும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய காலம் வந்துவிட்ட படியால் நான் இதை வாசிக்கப்போகிறேன்; யாவரும் கவனமாய்க் கேளுங்கள்" என்று கூறிவிட்டு அதை வாசித்துக் காட்டினர்.

அந்த மரண சாசனத்தின்படி அரசருக்குப்பின்

அவர் சகோதரர் புதல்வியாகிய ஜீவரத்னம் சீமாட்டியே நயனபுரிக்கும் அதைச் சேர்ந்த தேசம், தீவுகள் முதலிய யாவற்றிற்கும் அரசியாய்ப் பட்டங்கட்டிக்கொண்டு ஆள வேண்டும் என்றும், அவள் மணம்புரிந்து கொண்டால் அவள் கணவனும் அவள் கூட அரசனுகச் சிம்மாதனத்தி லமரலாகுமென்றும், அவளுக்குத் தக்க வயது வருமுன் அரசன் இறக்க நேர்ந்தால் பிரதிநிதிச் சபையார் அவ ளுக்கு வயது வருமட்டும் இராஜ்ய பரிபாலனம் செய்ய வேண்டும் என்றும் கூறியிருந்ததோடு பிரதிநிதிச் சபையில் இன்னேரின்னேர் அவயவிகளா யிருக்கவேண்டுமென்று நியமகம் செய்யப்பட்டிருந்தது. அவர்களில் துஷ்டகேது ஒருவனைச் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இவ்விஷயம் சபை யிலுள்ள மந்திரிகள் முதலிய எல்லோர் மனங்களிலும் பட்டதால் யாவரும் அவனை நோக்கினர்கள். துஷ்ட கேது ஒன்றையும் கவனிக்காதவன் போலவே இருந் தான். காரியதரிசி மரண சாசனத்தை வாசித்து முடித்த பின் "இனி வேறு ஏதேனும் மரண சாசனம் இந்தச் சாச னத்திற்குப்பிறகு ஏற்பட்டதாயிருந்தால் அதை வெளிக் குக்கொண்டுவர இதுதான் காலம்" என்ருர்.

உடனே துரைத்தன இலாயராகிய வேணுநாதன் எழு ந்து "இதோ அரசருடைய மற்ருெரு மரண சாசனம்; இதைப்பாருங்கள்" என்று தமது கரத்திலிருந்த கடித உறையைக் காரியதரிசியிட மளித்தான்.

காரியதரிசி அதைக்கரத்தில் வாங்கியதும் சந்தேகத் தோடு நோக்கி "இது உம்மிடம் அரசரால் அளிக்கப்பட் டதா?" என்று வினவினர். இலாயர் ஆம் என்றதே காரியதரிசி "இதில் அடங்கியுள்ள விஷயம் தங்களுக்குத் தெரியுமோ?" என்று கேட்டார். இலாயர் "பிரபுவே! எதற்கும் தாங்களே அதைப்பிரித்து பகிரங்கத்தில் வெளி

யிடுவது உசிதமென்று தெரிவித்துக்கொள்கிறேன் '' என்ருர்.

அதன்மேல் இராஜாங்கக் காரியதரிசி அக்கடித உறையைப்பிரித்து உள்ளிருந்த பத்திரத்தை யெடுத்தார். அச்சமயம் இராஜகுமாரியின் மனம் பெருந் தத்தளிப்பி லிருந்தது. டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் முகத்தில் மட்டும் ஒரு வித்தியாசமான குறியும் தோன்றவில்லை. துஷ்டகேதுவின் மனதில் அடக்கமுடியாத படபடப்பும் சந்தோஷமு முண்டாயின. 'ஆச்சு இன்னும் இரண்டொரு நிமிடங்களில் முன் வாசிக்கப்பட்ட மரணசாசனம் பய னற்றதாய்ப் போய்விடப்போகிறது. நாம் அரசனுய் விடப்போகிருேம்' என்ற எண்ணம் அவனை யறியாமலே யவன் முகத்தில் ஒருவிதச் சந்தோஷப் பிரகாசத்தையும் புன்னகையையு முண்டாக்கி விட்டது. சபையிலுள்ள அனைவர் மனமும் மிக்க ஆவல்கொண் டிருந்தது. ஜீவரத் னம் இராஜகுமாரியைச் சேர்ந்தவர்களுக் கெல்லாம், துஷ்டகேது பட்டத்திற்கு வந்துவிட்டால், தங்களுக்கெல் லாம் அவசியம் தீங்கிழைப்பான் என்ற கருத்தால் பெருந் திகிலாகவிருந்தது. அமரநாதன் உன்னிப்பாய் யாவற்றை யும் கவனித்துக்கொண்டிருந்தான்.

ஆ! அதென்ன அதிசயம்? காரியதரிசியின் முகத் தில் சந்தோஷமும் மிக்க ஆச்சரியமுமான குறிகள் தோன்றுகின்றன. அவர் தமது கரத்திலிருக்கும் பத்தி ரத்தைத் திருப்பித்திருப்பிப் பார்க்கிருர். யாவரும் மிக்க வியப்போடு சிரங்களை நீட்டிக்கொண்டு அவரைக் கண்ணி மையாது நோக்குகிருர்கள். காரியதரிசி துரைத்தன இலா யரை நோக்கி, மிக்க வியப்போடு "நண்பரே! இதென்ன ஏதோ தவறு நேர்ந்ததோ என்ன? இப்பத்திரம்—பத் திரமா?-இது வெறுங்கடிதமாயிருக்கிறதே!'' என்ருர்.

துஷ்டகேது உடனே துள்ளியெழுந்து "என்ன? வெறுங்கடிதமா? பொய். பெரும்பொய். ஏ! தாடி நரைத்த கிழப்பயலே! உன் உளறலுக்குத் தக்க தண்டனை யனுபவிப்பாய்'' என்றான். காரியதரிசி சாந்தமாகவே, "பிரபுவே! சாந்தமான வேளையில் உமது மனமே உம்மை யிதற்காக வாதிக்கும்'' என்று கூறிவிட்டு, அக் கடிதத்தை யாவர்க்கும் திருப்பித் திருப்பிக் காட்டி "இதோ பாருங்கள் இதில் ஒரு எழுத்தாவதிருக்கிறதா? இதிலிருந்த அரக்குகூட கரைந்துபோயிருப்பதால் அதன் மேல் எவ்வித முத்திரையும் புலப்படவில்லை'' என்றார்.

சபையோர் அனைவரும் இதைக்கேட்டு மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து ஆவலோடு இனி என்ன நடக்குமோவென்று பார்த்துக்கொண் டிருந்தார்கள். துஷ்டகேது மிக்க கோபத்தோடு பாய்ந்துபோய்க் காரியதரிசி கையிலிருந்த காகிதத்தைப் பிடுங்கிப் பார்த்தான். அதில் ஒரு எழுத்துமில்லை. அதில் ஒரு எழுத்தாவது எழுதிய அடையாளமேயில்லை. ஒருகோடுகூட அதிலில்லை. அவன் கோபத்தோடு அதை விசிறி யடித்துவிட்டு "இதில் ஏதோ பெருஞ்சூது நடந்திருக்கிறது'' என்று தன் உடைவாளின் கைப்பிடியைத் தொட்டான்.

காரியதரிசி "எப்படியிருந்தாலும் அதைப்பற்றி விசாரிக்க இது இடமுமல்ல காலமுமல்ல'' என்று அதிகாரதோரணையோடு கையைப் பிடித்தான்.

துஷ்டகேது:—"அப்படியல்ல. இதுதான் இடமும் காலமும். இப்பத்திரம் எதனாலோ இம்மாதிரியாய்விட்டது. ஆனால் இலாயர் வேணுநாதர் இதில் என்ன எழுதப்பட் டிருந்ததென்பதையும், இவர் அதில் சாக்ஷி கையொப்பம் வைக்கவில்லையா என்பதையும்,

அரசர் எப்படி யிதை யிவரிடம் கொடுத்தாரென் பதையும் கூறட்டும்" என்ருன்.

அவ்வாறு கூறிக்கொண்டே துஷ்டகேது இலாயரை மிக்க கோபமான பார்வையாய்ப் பார்த்தான். அவனு டைய அக்கினிச் சுவாலை வீசும் பார்வையைக்கண்ட இலா யர் நடுங்கிவிட்டார். அவன் பார்வை "நீ இச்சமயம் என் பக்ஷம் சாராவிட்டால் உன்னை யதோகெதி யாக்கிவிடு வேன்"என்று கூறுவது போலிருந்தது. ஆகையால் அவர் மிக்க பயமடைந்து அவன் பிரியப்படி கூறிவிடவே யிருந் தார்.

ஆனால் அச்சமயம் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை தட் டென்று ஆசனத்தை விட்டெழுந்து நின்று இலாயரை யுற்று நோக்கியபடியே, "இந்த விஷயத்தில் ஒரு சாட்சி யின் ருசுவேண்டியிருக்கிறதாய்த் தோன்றுவதால் என் னையே அச்சாட்சியாயிருக்கும்படி வேணுநாதம்பிள்ளை யவர்கள் அனுமதியளிப்பார்களென்றே பூரணமாய் நம்பு கிறேன். இதைப்பற்றி வேண்டிய சாட்சியத்தை நான் கூறக்கூடும். ஏனெனில், அரசர் இப்பத்திரத்தை யிவரி டம் கொடுத்தபோது நானும் கூட விருந்தேன்" என் ருர்.

இந்த அபாண்டமான பெரும் பொய்யைக்கேட்ட இலாயர் இடிவிழுந்தவர்போ லாய்விட்டார். ஆயினும் சமாளித்துக்கொண்டு, "இதுவும் நமது நற்காலமே. இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து இந்த ஆள் நம்மைக் காப் பாற்றி விடுவான்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு காரியதரிசியாகிய பிரபுவை நோக்கி "நான் டாக்டர் அவர்கள் பிரியப்படி கூறும்படி ஒப்புக்கொள்ளுகிறேன். பிரபுவே தாங்கள் அனுமதி யளிக்கக்கோருகிறேன்" என்ருர்.

காரியதரிசி யுடனே டாக்டரை நோக்கிக் கூறும் என்ருர். டாக்டர் தங்கவேலுப்பிள்ளை, காரியதரிசியையும் சபையோரையும் நோக்கி, "அரசர் அப்பத்திரத்தை யிவரிடம் அளிக்கும்போது எங்களை நோக்கிப் பின் வருமாறு, கூறினர். அதாவது,

'துஷ்டகேதுவின் பேராசை பொருந்திய யோசனைகளையும், அவன் என் சகோதரன் புத்திரியாகிய ஜீவரத்னத்தினிடமிருந்து அவள் பட்டத்தை யபகரித்துக் கொள்ள முயல்வானென்றும் நான் நன்கறிவேன். ஆகையால் நான் அவனுக்கு ஒரு புத்தி கற்பிக்கிறேன். அதனல் அவன் தாழ்மை யுணர்ந்து நற்புத்தி யடைவான் என்று கருதுகிறேன். இதோ இந்த முத்திரை யிட்டக் கடித உறையை யெடுத்துக் கொள்ளுங்கள். நான் இறந்து போனதே இரண்டாவது ஒரு மரண சாசனம் எழுதப் பட்டிருப்பதாய்ப் பிரஸ்தாபப் படுத்தப்படட்டும். இந்தப் பத்திரம் யாவர் முன்பும் பிரிக்கப்படும்போது அவனுடைய நோக்கங்களும் எண்ணங்களும் யாவர்க்கும் தானே விளங்கும். அவன் உள்ளத்திலிருக்கும் அயோக்கிய எண்ணங்களெல்லாம் அப்போது வெளிப்படும். இப் பத்திரம் வெறுங்கடிதம் என்று அவன் அறிந்ததே, அவன் தன்னுடைய பேராசை பயன்படவில்லை யென்றுணர்வதோடு அதுமுதல் நல்வழியில் திரும்புவான் என்று கருதுகிறேன்.' என்று இவ்வளவே அரசர் கூறினர். அவர் கூறியபடி இந்த இராஜகுமாரருடைய நோக்கங்கள் வெளியாகின்றனவா என்பதைப்பற்றிச் சபையோரே சிந்தித்துணரலாகும். ஆனல் இனி அவர் நல்வழிக்குத் திரும்புவாரா என்ற விஷயம் போகப்போகக் காலத்தால் தான் தெரியவரும்." என்று கூறினர்.

டாக்டர் எழுந்து தான் சாட்சி கூறுவதாயியம்பிய

போதே, துஷ்டகேது, "ஓகோ நமது எண்ணம் அடியோடு கெட்டுவிட்டது" என்று பேரிடிவிழுந்தவன் போல் சோர்வடைந்து விட்டான். "எழுதப்படாத மரண சாதனத்தை யெழுதப்பட்டதாகவும் அது இலாயரிடம் கொடுக்கப்பட்டபோது தான் கூடவிருந்ததாயும் இத்தகைய பெரிய அபாண்டமாகிய பொய்கூறும் இவன் நடந்த விஷயங்களை யெல்லாம் அறிந்தே யிருக்கவேண்டும். இவன் நமது விவகாரத்தை யடியோடு கெடுத்து விடுவான்." என்று பூரணமாய்அறிந்து கொண்டான். டாக்டரை யெதிர்த்துக்கொள்ள இராஜகுமாரனுக்கு எள்ளளவும் தைரியமில்லை. ஏனெனில் தான் அவனிடம் கூறிய கொலை ஆலோசனையை யவன் வெளிப்படுத்தி விடுவான் என்றும், பத்மநாயகி அதற்குச் சாட்சியாய் வந்து அதை ருசுப்படுத்தி விடுவாளென்றும் அவனுக்குப் பெரும் பீதி யிருந்தது.

ஆகையால் அவன் டாக்டரை யெதிர்த்துப்பேசக் கூடாதவனாய் அவரைக் கொன்றுவிடலாமாவென்ற ஆத்திரத்தோடு இரண்டு மூன்று முறை தன் உடைவாளின் கைப்பிடியைத் தொட்டான். டாக்டர் அதைக் கண்டும் காணாதவர் போல் தைரியத்தோடும் வெறுப்போடும் துணிகரமாய் மேற்கண்டவாறு கூறினார்.

காரியதரிசியாகிய பிரபு சபையோரை நோக்கி "இப்போது நடந்த விஷயங்களைப்பற்றி நான் ஏதேனும் கூறுவது அனுவசியம். ஆகையால் இப்போது நடக்க வேண்டிய காரியத்தைத் தொடங்கி முடிப்போம். நமது அரசர் எழுதிவைத்த மரணசாசனத்தில் கண்டபடி மகா கனம் பொருந்திய ஜீவரத்னம் சீமாட்டியே இப்போது நமக்கு அரசி யென்பதை யாவரும் அறியும்படி பகிரங்கப் படுத்துகிறோம். அதோடு, இராணியின் கணவராகிய

அமரநாதம் பிரபு......'' என்பதற்குள், இராகவன் "நமது ஜீவரத்னம் இராணி வாழி, வாழி'' என்று கூவினன். உடனே மற்றபேரும் அவ்வாறே வாழ்த்தத்தொடங்கிச் சத்தமிட்டார்கள். இச்சத்தம் வீதியிலுள்ளவர்களுக்குக் கேட்க அவர்களும் அவ்வாறே சத்தமிட்டார்கள். ஆகையால் எங்கும் இராணியைப்பற்றிய வாழ்த்தொலியே செவிகள் செவிடுபடும்படி கிளம்பின.

இதனுல் காரியதரிசி பன்முறை முயன்றும் அமரநாதனைப்பற்றிய விஷயத்தைக் கூறமுடியாமற் போய்விட்டது. அவன் அரசனுகப் பகிரங்கப்படுத்தப்படலாகாதென்பதே இராகவனுடைய கெட்ட எண்ணம். அதனுல் வேணுமென்றே அவன் அவ்வாறு செய்தான். அச்சமயம் ஜீவரத்னம் இராஜகுமாரி, தான் இராணியாகக் கொண்டாடப்பட்டதைக் கேட்டதே, திடீலென்று மனதிலுண்டான சந்தோஷத்தால், மூர்ச்சையாய் விழுந்து விட்டாள். அவள் தோழியும் இராணி முதலியவர்களும் அவளை வேறறைக்கு எடுத்துச் சென்றுர்கள். அக்குழப்பத்தில் துஷ்டகேது எழுந்து அமரநாதன் இருக்குமிடத்திற்குச் சென்று அவனை நோக்கி இரகசியமாய் "இப்போது நடந்த சம்பவங்கள் நம்மிருவரையும் சிநேகராகச் செய்து விட்டன. நாமிருவரும் வஞ்சிக்கப்பட்டோம்; இதற்குத் தக்க வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உனக்குமிருக்கிறதல்லவா?'' என்றுன். அமரநாதன் ஆம் என்றுன். துஷ்டகேது, "சரி. இனி நாம் இருவரும் ஒரு மனதாய்ச்சேர்ந்து நமது விரோதிகள்மேல் தக்கபடி வஞ்சந்தீர்த்துக்கொள்ள முயலவேண்டும். இனி இங்கு நமக்கென்ன வேலை? எழுந்திரும் செல்வோம்'' என்றுன்.

உடனே இருவரும் அந்தச் சபாமண்டபத்திலிருந்து

புறப்பட்டு அங்கிருந்த ஜனக்கூட்டத்தில் நுழைந்து வெளிப்பட்டார்கள். புதிதாய்ப் பட்டத்திற்கு வந்த இராணி அவளுடைய அறைக்குக் கொண்டு போகப்பட்டதும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை தக்க உபசாரங்களால் அவளுக்கு ஸ்மரணைவரும்படிச் செய்தார். சித்திராங்கியாகிய இராணியின் தோழி மயில் விசிறி கொண்டு விசிறத் தொடங்கினள். இவள் நமது கதையில் விசேஷ சம்பந்த முடையவளான படியால் இவளைப்பற்றி இரண்டொரு விஷயங்களைக் கூறிவிட்டு நமது கதையைத் தொடங்குவாம்.

சித்திராங்கிக்கு வயது பதினேழாகிறது. இவள் ஜீவரத்னம் இராஜகுமாரிக்குத் தோழியாய் வந்து இரண்டு வருடங்களாயின. இவள் காணும் ஆடவர் மனதைக்கவரத்தக்க அழகுடையவள். சற்று உயரமாயிருந்தாலும் அதற்குத் தக்கபடி மற்ற அவயவ இலட்சணங்களைப் பூரணமாயுடையவள். வெளிக்கு அவளுடைய கம்பீரமும் அழகும் நிறைந்த உருவம் ஒரு தேவமாதின் உருவம் போல் தோன்றியது. ஆனல் அந்தோ அவள் மனதின் இலட்சணமோ கொடிய பேயின் இலட்சணத்திலும் கொடிதாயிருந்தது. பதினைந்தாவது வயது பூரணமாவதற்குள்ளாகவே பெண்களுக்குரிய அச்சம் மடம் நாணம் முதலியயாவற்றையும் அடியோடு மறந்துவிட்டாள். எதற்குமஞ்சாத துணிகரச் செயல்களைச் செய்வதிலும், சூது, தந்திரம், நயவஞ்சகம் இவற்றைச் சாமார்த்தியமாய்க் கையாளுவதிலும் மிக்க விருப்பமுடையவ ளாய்விட்டாள். எப்படிப்பட்ட ஆடவனையும் தந்திரமாய்த் தன் வலையிற் சிக்கச்செய்வதில் மிக்க வல்லவள். இத்தகைய குணங்களை யுடையவள்தான் நமது காரியங்களுக்கெல்லாம் தக்க உதவியாயிருப்பாளென்று நன்குணர்ந்தே, பத்ம

நாயகி அவளை இராஜகுமாரிக்குத் தோழியா யமர்த்திக் கொண்டாள். இராஜகுமாரி ஆரம்பத்தில் இவளுடைய வனப்பைக்கண்டு இவளைத் தோழியாய் வைத்துக்கொள்ளப் பிரியங்கொண்டாள். பிறகு போகப்போக இவளுடைய சாமார்த்தியமான அபிநயங்களாலும் தந்திரமான சம்பாஷணை முகஸ்துதி முதலியவற்றாலும் மயக்கப்பட்டு இவளைத் தன் மனமொத்த அன்பார்ந்த சினேகியாகப் பாவித்துக்கொண்டாள். இவள் " ஆ! இவ்வுலகில் மிக்க அக்கிரமும் பாரபட்சமும் நடக்கின்றன. ஆடவர் மட்டும் தங்களுக்குப் பிரியமான அழகிய மாதரோடு சினேகமாகி அவர்கள் சகவாசத்தில் சந்தோஷத்தை யனுபவிக்கலாம். ஆனால் மாதர்கள் அப்படிச் செய்தால் குற்றமாம். இதென்ன நியாயம்? தைரியமும் புத்தியுமில்லாக் கோழைகளாகிய சில பெண்கள் மூடத்தனமாய் இதற்குக் கட்டுப்பட்டுத் தங்கள் மனதிலேயே தங்கள் அதிருப்தியையும் துயரையும் அடக்கிக்கொண்டு அவதிப்படுகிறார்கள். அதோ பாரும்........னுடைய மனைவி தனக்கு இஷ்டமான புருடரைத் தன் மனவிருப்பப்படி நடக்கும் வண்ணம் செய்துகொண்டு எந்நேரமும் ஆனந்தமாய்க் காலத்தைப் போக்கிக்கொண்டு சுகிக்கிறாள். அவள் கணவன் அவள் பிரியப்படி நடந்துகொள்கிறான்" என்று இத்தகைய போதனைகளையும், தான் மிக்க சாமார்த்தியத்தோடு வாலிபர்களை மயக்கி அவர்கள் செல்வத்தைப்பறித்துக்கொண்டு கற்பை யிலட்சியம் செய்யாது நடந்துகொண்ட கதைகளையும் இராஜகுமாரிக்குக்கூறி, இராஜகுமாரியும் நாம் நமது புருடனுக்குத் துரோகம் செய்து இராகவனைக் கள்ளக்காதலனாகக் கொண்டனுபவிப்பது குற்றமல்லவென்று கருதும் வண்ணம் செய்துவிட்டாள். இத்தகைய குணங்களையுடைய சித்திராங்கி என்றக கன்

னிகை பத்மநாயகிக்குத் துணையாயுதமாகவும், இளம்பருவமுடைய இராணிக்குத் தோழியாகவும் வந்து சேர்ந்திருக்கிருள் என்று கூறி முடித்துக் கதையைத் தொடர்ந்து செல்வாம்.

* * * * * *

மேலே கூறியபடி அரண்மனையில் அவ்விதக் குழப்பமாயிருக்கும் அதே காலத்தில் ஆத்மநாதம் பிரபுவின் மாளிகையிலிருந்து ஒரு அழகிய கன்னிகையும் அவள் பின்னல் இரண்டு தோழிகளும் வெளியில் வந்துகொண்டிருக்கிருர்கள் :

அக்கன்னிகைக்குப் பதினெட்டு வயதாகிறது. அவளே நமது கதையின் ஆரம்பத்தில் ஆத்மநாதம் பிரபுவிற்குப் பிறந்தபெண். அவளுடையவனப்பு மிக்க கம்பீரமும் காண்போர்க்கு வியப்பையும் அச்சத்தையும் மரியாதையையும் உண்டாக்கத்தக்கது. அவ்வாறே அவளுடைய உள்ளமும் மிக்க பரிசுத்தமானது. உலகில் கள்ளம், கபடு, சூது, வஞ்சனை, துஷ்டத்தனம், விபசாரம் முதலியவை யிருக்கின்றன வென்பதையே அவள் அறியாளெனின், அவளுடைய குற்றமற்ற பரிசுத்தத் தன்மையைப்பற்றி நாம் இன்னும் விவரமாய்க் கூறவேண்டியது. அவசியமின்ரும். அக்கன்னிகை அரசன் மரணத்திற்காகக் கறுப்புடை யணிந்துகொண் டிருக்கிருள். அவளுடைய நாமதேயம் குசலாம்பாள். அச்சமயம் அவள் கடவுளைத் தோத்திரம் செய்வதற்காகத் தான் வழக்கமாய்ச் செல்லும் ஆலயத்திற்குச் செல்கிருள்.

குசலாம்பாள் தன் தோழிகளோடு கோயிலுக்குள் பிரவேசித்ததும் தான் வழக்கமாய் நின்று தொழுமிடத்தை நண்ணிஞள். அங்குள்ள பலி பீடத்தினருகில் சென்றதும், தான் முழங்காற்படியிட்டு வழக்கமாய்த்

தொழுமிடத்தில் வேறொருவர் இருப்பதைக்கண்டு திடுக்கிட்டு நின்றாள். அங்கிருந்தவன் ஒரு வாலிபன். அவனுக்கும் பதினெட்டு வயதேயாகிறது. அவன் முழங்காற்படியிட்டு ஒரே நாட்டமுடையவனாய்க் கடவுளைத் துதித்துக் கொண்டிருக்கிறான். அவன் சற்று உயரமாய், பிரசித்தி பெற்ற சிற்ப சாஸ்திரி தன் சாமார்த்திய முழுதும் காட்டி வெள்ளை சலவைக்கல்லினால் ஒரு அழகிய வாலிபன்போல் செய்த உருவம் எவ்வாறிருக்குமோ அவ்வாறேயிருந்தான். அவனுக்கு இன்னும் மீசை கொஞ்சங்கூடத் தோன்றவில்லை. அவன் மிக்க மனோ வேதனையுடையவன் போல் தன் பிரார்த்தனையில் தேம்பி யழுதுகொண்டிருந்தான். அவன் உருவத்தை யுற்று நோக்கிய குசலாம்பாள் அத்துயரமான சத்தத்தைக்கேட்டுப் பரிதாபமடைந்து நின்றாள்.

தன் அருகில் காலடிச்சத்தம் உண்டானதைக்கேட்ட அவ்வாலிபன் தலை நிமிர்ந்து பார்த்துத் தன் முன் தோன்றிய அழகு வாய்ந்த கன்னிகையைக்கண்டதும் எழுந்து அவர்கள் தேசசாரம்போல் அங்கிருந்த ஜமக்காளங்களில் ஒன்றையெடுத்து அவள் தொழுவதற்கு ஆசனமாகப் போட்டான். குசலாம்பாளும் கடவுளைத் தொழ ஆரம்பித்தாள். ஆனால் என்றைக்குமில்லாதபடி அன்று அவள் மனம் வேறு வழிப்பட்டு கடவுள் உபாசனையில் நிலைத்து நிற்கவில்லை. தான் கண்ட அழகிய வாலிபனுடைய உருவம் அவள் மனதினின்றும் நீங்கவில்லை. ஆகையால் அவள் தன்னை மறந்து தலை நிமிர்ந்து அவ்வாலிபன் இருக்கும் திக்கை நோக்கினாள். தெய்வசங்கல்பமாய் அதே சமயம் அவனும் தலை நிமிர்ந்து குசலாம்பாளை நோக்கியதால் இருவர் கண்களும் சந்தித்தன. குசலாம்பாள் உடனே ஒரு வித நாணங்கொண்டு சட்டென்று குனிந்துகொண்டாள்.

உடனே அரசன் மரணத்திற்காகக் கோயிலில் சங்கீதம் பாடப்பட்டது. அச்சங்கீதம் மிக்க சோகரசமுடைய தானபடியால் யாவரும் மனங் கரைந்து கடவுளைத் துதித்தார்கள். நமது வாலிபன் அச் சோகத்தில் ஈடுபட்டுக் கடவுளைத்துதித்துக்கொண் டிருந்தவன் "அய்யோ ! கடவுளே! மரணம் எனக்கு வரவில்லையே நான் என்ன தீவினை செய்தேனோ ஓ தெய்வமே! நான் என் இன்னும் இவ்வுலகிலிருக்கவேண்டும்" என்று துக்கித்தான். அம்மொழிகள் அருகிலிருந்த குசலாம்பாள் செவிகளில் விழுந்ததும் அவள் தலை நிமிர்ந்து வாலிபனை நோக்கினாள். அவள் மனதில் அவன்மேல் மிக்க இரக்கம் தோன்றியது. முன்னமே அவன் வனப்புடைய உருவம் அவள் அவனை மறக்கவொட்டாது செய்துவிட் டிருக்கிறது. அச்சமயம் வாலிபனுக்கும் "அடடா நாம் வாய்பதறி நமது வியாகூலத்தைக் கூறிவிட்டோமே, அந்தக் கன்னிகை யருகிலிருந்தாளே" எனத் திடீலென்று நினைப்பு வந்தபடியால் தலை நிமிர்ந்து குசலாம்பாளை நோக்கினான். மறுபடி இருவர் பார்வைகளும் சந்தித்தன. ஆனால் இம்முறை குசலாம்பாள் உடனே திரும்பிக்கொள்ளவில்லை. ஆனால் அவனை இரக்கமான பார்வையாய்ப் பார்த்துக்கொண்டே மெதுவாய் எழுந்து நின்றாள். அச்சமயம் அவளுடைய கையிலிருந்த சிறு பணப்பை கீழே வீழ்ந்து விட்டது.

வாலிபன் தட்டென்றெழுந்து அப்பையை யெடுத்து அவளிடம் அளித்து, "ஆ! கன்னிகையே! நீ என் விஷயத்தில் இரக்கம் கொண் டிருக்கிறாயென்று தோன்றுகிறது. நான் அதற்காக உண்மையாகவே மிக்க வந்தனமளிக்கிறேன்" என்றான்.

குசலாம்பாள்:—"நீ மிக்க துயரத்தை யனுபவிப்பதைக் காண என் மனம் வியாகூலமடைந்தது" என்றாள்.

வாலிபன்:—"ஆ! என் மனதில் இருக்கிற துயரம் இத்தன்மையதென உன்னால் உணரமுடியாது. இதோ கடவுளிருக்கும் இடத்திலிருந்து, இன்னும் கடவுள் முன்னிலையிலேயே கூறுகிறேன்; நான் பிறந்தது முதல் இது காறும் எவ்விதமான அற்ப பாபத்தையேனும் செய்தவனல்ல. என் மனமறிந்து ஒரு சிறு புழுவைக்கூட மிதித்தவனல்ல. என் மனதில் எவ்விதக்கெட்ட எண்ணத்தை யேனும், பாபக் கிருத்தியங்களை யேனும் கருதியவனல்ல, எனக்குத் தெரிகிறவரையில், நீயும் ஒரு குற்றமறியாதவளென்றும் மிக்க பரிசுத்தமான உள்ளமுடைய உத்தமியென்றும் எனக்குத் தெரிவதால், உன்னுடைய இரக்கத்தைப் பெறும்படியான சந்தர்ப்பம் நேர்ந்ததற்காக நான் கடவுளை வாழ்த்துகிறேன். உன் இரக்கமும் பரிதாபமுமான பார்வை என் உள்ளத்தினுள்ள இரணத்தின்மேல் ஊற்றப்பட்ட நெய்போலிருக்கிறது. நான் ஒரு குற்றமும் செய்யாதவனாயினும் கடவுளுடைய கோபத்தில் சிக்கிக்கொண்டு அந்தோ என் மனத்திலுள்ளத் தீராவேதனையை ஒருவருக்கும் வெளியிடக்கூடாதவனா யிருக்கிறேன்" என்றான்.

குசலாம்பாள் பின்னும் வியாகூலமடைந்து, "அப்படிக் குற்றமற்ற நீ இத்தகைய துயரத்தையேன் அனுபவிக்க வேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை" என்றாள்.

வாலிபன்.—"தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் வலிய என் துயரத்தை யுன் மனதிற் போடுவது பெரியதப்பிதம். ஆம். துயரமென்பதையும் குற்றமென்பதையும் எள்ளளவுமறியாத பரிசுத்தமான உன் மனதிற்கு நான் துயரத்தை யளிப்பது

பெரும்பாதகம். ஆயினும் உன் இரக்கமான சொற்கள் எனக்குத் தேவாமிர்தம்போன் றிருக்கின்றன'' என்று குனிந்து அவள் கரத்தைத்தொட்டு முத்தமிட்டுக்கொண்டு அங்கிருந்து மெதுவாய்ச்சென்றான்.

உடனே குசலாம்பாளும் அவள் தோழிகளும் அதை விட்டுப் புறப்பட்டார்கள். ஆனல் குசலாம்பாள் தான் கோயிலில் கண்ட அவ்வாலிபனுடைய உருவத்தை மறக்க முடியாதவளானள்.

12-வது அத்தியாயம்.

துஷ்டகேதும் அமரநாதனும் — துஷ்டகேதுவின் தந்திர ஆலோசனை — துஷ்டகேதுவின் மாளிகையில் சதியாலோசனை — திடுக்கிடும் அபூர்வ சம்பவங்கள் ஜீவரத்னம் இராஜகுமாரி இராணியாய் முடி சூட்டப்படல்.

அரண்மனையின் சபாமண்டபத்தை விட்டுப் புறப்பட்ட துஷ்டகேதுவும் அமரநாதனும் அங்கிருந்து இருள்சூழ்ந்த ஒரு தாழ்வாரத்தின் வழியாய்ச் சென்று தோட்டத்தில் பிரவேசித்து பின்பக்கமுள்ள ஒரு வழியாய் அங்கிருந்த வீதியில் பிரவேசித்தார்கள். ஏனெனில் அரண்மனையின் மற்ற பக்கங்களிலெல்லாம் ஜனங்கள் நெருக்கமாய்க் குழுமிக்கொண்டு இராணியை வாழ்த்திக் கொண் டிருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் பின்னலிருக்கும் வீதியின் வழியாய் முகமூடி யணிந்துகொண்டு துஷ்டகேதுவின் மாளிகையை நோக்கிச் சென்றார்கள்.

துஷ்டகேதுவின் மாளிகை இராஜமாளிகையிலிருந்து கால் மைல் தூரத்திற்குள்ளாகவே யிருந்தது. அந்த

மாளிகை இராஜனுடைய அரண்மனையைப் போலவே எல்லா விஷயங்களிலுமிருந்தது. அது ஒருபெரிய தோட்டத்தின் மத்தியிலிருந்தது. மேல் பார்வைக்கு அது அவ்வளவு ஆடம்பரமானதாய்த் தோன்ருவிடினும், உள்ளே செய்யப்பட்டிருக்கும் அலங்காரங்களிலும் செல்வப் பெருக்கிலும் இராஜனுடைய அரண்மனைக்குப் பின் வாங்கியதல்ல. அது ஒரு பாதுகாப்பான கோட்டை போல் கட்டப்பட்டிருந்தது. அதன் வெளிப்புறம் பிரம்மாண்டமான வாயிற்படியொன்றுண்டு. அதையன்றி அதைச் சூழ்ந்திருக்கும் மதில் சுவரின் மூன்றுநான்கு இடங்களில் சிறு வாயிற்படிகள் உண்டு. இவர்களிருவரும் அவ்வாயிற்படிகளில் ஒன்றின்வழியே தோட்டத்திற்குள் நுழைந்து, கோட்டைபோன்ற அரண்மனையின் ஓர் அலங்கத்தின் கீழ் இருந்த வாயிற்படியில் நுழைந்து ஓர் நீண்ட தாழ்வாரத்தின் வழியே சென்று அதன் கோடியிலிருந்த சுழல்படிகளின் வழியாயேறி மேலிருந்த ஒரு அறைக்குச் சென்ருர்கள்.

அமரநாதனும் துஷ்டகேதுவும் இராஜனுடைய அரண்மனையிலிருந்து புறப்பட்டதுமுதல் வழியில் ஒருவரோடொருவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. நடந்த விவகாரம் அமரநாதனுக்கும் மிக்க அவமானமாய்ப் பட்டது. ஆயினும் வரவர அவனுக்கிருந்த கோபம் கொஞ்சங்கொஞ்சமாய்த் தணிந்துகொண்டே வந்தது. டாக்டர் தங்கவேலுப்பிள்ளை, பத்மநாயகி, இராகவன், இராஜகுமாரி இவர்கள் நால்வரும் ஜெயமடைந்தார்களென்றும் தன்னையவமானப்படுத்தினுர்களென்றும் அவன் பூரணமாய் உணர்ந்தான். ஆனுல் டாக்டருக்கு விரோதமாய் நடக்க அவனுக்குப் பெரும்பயம். ஏனெனில் டாக்டருக்குத் தன்னைப்பற்றி ஒரு பயங்கரமான இரகசியம் எப்படியோ

தெரிந்துவிட்டிருக்கிறது. அது பகிரங்கப்பட்டுவிட்டால் தனக்குப் பெரிய வெட்கக்கேடான அவமானத்தை யுண்டாக்குவதோடு, ஜீவரத்னம் இராணியின் கணவனுயிருக்கிற பதவியே யடியோடு போய்விடும். மேலும் அவசியம் நேர்ந்தால் டாக்டர் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தித் தன்னை யடியோடழித்துவிடச் சற்றும் பின் வாங்கமாட்டானென்று அவன் அறிவான்.

துஷ்டகேதுவோ சூதாலும் தந்திரத்தாலும் பட்டத்தை யபகரித்துக்கொள்ள இனி ஒருபோதும் முடியாதென்றும், தன் பிரயத்தனம் ஒன்றுமே பலிக்காதென்றும் நன்கு யுணர்ந்துகொண்டான். தேசத்தில் கலகத்தை யுண்டாக்கித் துராக்கிரதமாய்ப் பட்டத்தை யபகரிக்கலாமென்றாலோ, தன் பட்சத்தில் போதுமான பலமுடைய கட்சி சேராதென்று அறிவான். ஆகையால் அவன் ஒரு விதமான யோசனை செய்துகொண்டான். அதாவது அமரநாதன் பெயரையே சண்டைக்குக் காரணமாக வைத்துக்கொண்டு உள்நாட்டுச் சண்டையை யுண்டாக்கி நம்மால் கூடியவரை துணையிருந்து மரணசாசன நிபந்தனையின்படி அவனும் ஜீவரத்னம் இராணியோடு சிம்மாசனத்தில் அரசனாக அமரும்படி செய்துவிட்டு, பிறகு ஜீவரத்தினத்தை நீக்கி விட்டு அமரநாதனையே யரசனாக்கிவிட்டால் நாம் அவனை இஷ்டப்படி யாட்டிக்கொண்டு உண்மையில் நாமே அரசாட்சி செய்யலாம் என்று தீர்மானம் செய்துகொண்டான். இருவரும் இவ்வாறு அவரவர் யோசனையிலிருந்ததால் வழியில் ஒருவரும் வாய் திறந்து பேசவில்லை.

துஷ்டகேதுவின் மாளிகையில் இவர்களிருவரும் நுழைந்த அறை துஷ்டகேதுவின் இரகசிய அறை. அவன் பிரம்மச்சாரி. மாளிகையில் அவனை யன்றி அவன்

தாயார் மட்டுமேயிருக்கிறார்கள். பணியாள்கள் அனேகர் இருக்கிறார்கள். அவன் தாயாருக்கு வயது சுமார் ஐம்பதிற்கு மேலாகிறது. ஆயினும் நாற்பது வயது மாது போலவே காணப்படுவார்கள். மிக்க அழகு வாய்ந்தவர்கள். தெய்வபக்தி யுடையவர்கள். மாளிகையைவிட்டு வெளிச் செல்வதேயில்லை. அப்படியிருந்தும் தக்க காரியஸ்தர்கள் மூலமாய் அந்நகரிலுள்ள சத்பாத்திரமான ஏழைகள் வீடுகளிலெல்லாம் அந்தம்மாளுடைய தரும கைங்கரியம் நடைபெறும். துஷ்டகேது தன் வரையில் அத்தகைய சத்விஷயங்களில் வெறுப்புடையவனாயினும் தன் தாயார் செய்கைகளை மட்டும் புகழ்ந்து அந்தம்மாளிடம் பக்தியோடு நடந்து கொள்வான்.

அவனுடைய இரகசிய அறை நாற்புறங்களிலும் விலையுயர்ந்த திரைச்சீலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த பாத்திரங்கள் முதலிய யாவும் வெள்ளியாலும் பொன்னாலுமே செய்யப்பட்டவை. அந்த அறையின் ஒரு கோடியில் ஒரு கதவிருந்தது. அது துஷ்டகேதுவின் படுக்கை யறைக்குச் செல்லும் வழி. அங்குள்ள சுவர்களில் நிறைய கத்திகள், துப்பாக்கிகள், ஈட்டிகள், கவசங்கள் முதலிய பலவிதப் யுத்தாயுதங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. அதற்கு நேர் எதிர்ப்பக்கமிருந்த கதவுதான் இவர்கள் படிகளின் வழியாய் ஏறி அந்த அறைக்குள் வந்த வழி. அந்தப் பக்கத்திலுள்ள சுவர்களில் ஆள் உயரமுள்ள படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அவை அக்குடும்பத்தைச் சேர்ந்த முன்னோர்களில் பிரசித்தி பெற்றவர்களுடைய உருவங்கள். அங்கிருந்த இரண்டு பெரிய நாற்காலிகளில் இருவரும் உட்கார்ந்துகொண்டார்கள். துஷ்டகேது உட்கார்ந்த நாற்காலி ஆயுதங்கள் இருக்கும் திக்கை நோக்கியபடி யிருந்தது.

அமரநாதன் அமர்ந்த நாற்காலி படங்கள் இருந்ததிக்கைப் பார்த்தபடியிருந்ததால், அவன் அப்பக்கத்தை நோக்கிய படி உட்கார்ந்தான். இச்சம்பவம் அல்பமானதாயிருப் பினும் வாசிப்போர் இதை மனதில் வைத்திருக்கவேண் டும்.

இருவரும் உட்கார்ந்ததும், துஷ்டகேது அமர நாதனை நோக்கி "அமரநாதம்! நாம் இருவரும் சினேகிதர் களாகிவிட்டோம் என்று கூறினை. இப்போது நாம் சினேகிதர்களாகவே ஆலோசனை செய்யவேண்டும், சினே கிதர்களாகவே ஒருமித்து வேலை செய்து நமது கொடிய விரோதிகள்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ள வேண்டும்." என்றான்.

அமரநாதன் ஆரம்பத்திலேயே தனக்கிருக்கும் பீதியை வெளியிடலாகாதென்று, கருதி "ஆம். நீ கூறு வது சரியே. ஆனல் எப்படிச் செய்வது? டாக்டரும், பத்மநாயகி, இராகவன், அந்தச் சித்திராங்கி இவர்கள் நால் வரும் ஒன்றுய்க்கூடிப் புதிதாய் ஏற்பட்டிருக்கும் இராணி தங்கள் பிரியப்படி நடக்குமாறு செய்வார்கள். இந்த எதிரிகள் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அப்படிப் பட்ட எதிரிகளை நாம் எவ்வாறு வெல்வது?" என்றான்.

துஷ்டகேது "நான் கூறுவதைக் கேள். இரண் டாவது மரண சாசனத்தைப்பற்றி நாம் பேசவேண்டிய அவசியமின்றும். அது மிக்க தந்திரமான படுமோசத் துரோகத்தால் அப்படிப்போய்விட்டது. அரசர் முத லில் எழுதி வைத்த மரண சாசனத்தின் நிபந்தனைகளின் படி யாவருமே நடந்து கொள்ளவேண்டும். அதன்படி இப்போது நான் உன்னை அமரநாதம் என்றழைக்க லாகாது. மகாராஜா என்றழைக்கவேண்டும். அரசர் அச்சாசனத்தில் நீயும் சிம்மாதனமேறி அரசனுயிருக்க

வேண்டுமென்றே கண்டிருக்கிறார். அந்த உத்திரவை அமுலுக்குக்கொண்டு வரவேண்டும். நீயுன் கொடியைப் பறக்கவிடு. குடிகள் உன்மேல் பிரியங்கொள்வார்கள். உன் சகோதரர் உனக்கு உதவி செய்வார், பிரதமகுரு உன் விஷயத்தில் பிரியங்கொள்வார். உள் நாட்டுச் சண்டை நேர்ந்தால் அனேகர் உன் கொடியின் கீழ் வந்து குழுமிவிடுவார்கள். நான் என்னால் கூடிய சகல உதவியும் செய்வதோடு உனக்குச் சேனாதிபதியாயிருந்து அவசியமாயின் என் பிராணனைவிடச் சித்தமாயிருக்கிறேன். கட்டாயம் நீ ஜெயமடைவாய்" என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட அமரநாதன் கொஞ்சங் கொஞ்சமாய் உற்சாகமடைந்தான். ஆனால் திடீலென்று டாக்டர் தங்கவேலுப்பிள்ளைக்குத் தன் இரகசியம் தெரிந்திருக்கிறதே என்ற நினைப்பு வந்து விட்டதும் அவன் ஆவி சோர்ந்தது. ஆயினும் மெதுவாய்ச் சமாளித்துக்கொண்டு துஷ்டகேதுவை நோக்கி "ஆயினும் ஒவ்வொரு சமயத்தில் தந்திரமும் சூதும் செய்கிற வேலை சைனிய பலத்தால் நடவாது. அந்த டாக்டர் தங்கவேலுப்பிள்ளை ஒரு விடம் நிறைந்த நாகம்போல் சிம்மாதனத்தின் பின்னால் மறைந்திருந்து இரகசியமாய்ச் சூத்திரக்கயிறு பிடித்து இராணியை யாட்டுகிறான். அவன் இருக்கிறவரையில் எந்த முயற்சியும் பலிப்பது சாத்தியமானதல்ல" என்றான்.

துஷ்டகேது "ஆ! தெரிந்துகொண்டாயா! அந்த டாக்டர் தங்கவேலுப்பிள்ளையே யாவற்றிற்கும் காரணம். அந்தத் துஷ்டனே ஏதோ பெருமோசத்தால் என் காரியத்தைக் கெடுத்துவிட்டான்; அவனே எனக்கும் உனக்கும் இவ்வாறு பெரிய அவமானம் சம்பவிக்கும்படி செய்த கொடிய சண்டாளன்" என்றான்.

அமரநாதன், துஷ்டகேது டாக்டரை யொழித்துவிட வழி தேடுவானென்று எண்ணிக்கொண்டு "ஆம் ஆம். எனக்கு நன்றாய்த் தெரியும்" என்றான். துஷ்டகேது அப்படியாயின் அவன் மடியவேண்டியதே என்றான். அமரநாதன் "ஆம், டாக்டர் தங்கவேலுப்பிள்ளை மடிய வேண்டியதே" என்றான்.

துஷ்டகேது "பின்னாலிருந்து வேலை செய்யும் அத் துஷ்டன் ஒழிந்து போனால், சகல தந்திர சாமார்த்தியங்களுக்கும் குயுக்திச் சூட்சிகளுக்கும் மூலகாரணமாகிய சூத்திரக்கயிறு அறுந்துபோன மாதிரியேயாகும். அதன் பிறகு அரண்மனையில் நாம் அஞ்சத்தக்க விரோதிகள் யாருமில்லையென்றே நம்பலாம்" என்றான்.

அச்சமயம் துஷ்டகேதுவுக்குப் பின்னாலிருந்த படத்தை யுற்றுப்பார்த்துக்கொண்டிருந்த அமரநாதன் இமை கொட்டாது அதையே பார்க்கத்தொடங்கினான். ஏனெனில் இடையில் அவன் கண் முன் அவன் பிரமிப்படையத்தக்க ஒரு சம்பவம் நேர்ந்தது. அதாவது, ஆளளவு உயரமான அப்படம் ஒரு பக்கம் கதவுபோல் திறப்படுவதுபோலத் தோன்றியது. ஆகையால் அவன் மிக்க ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துவிட்டவன் போல் அசையாமல் அதையே பார்த்துக்கொண்டிருக்கத் தொடங்கினான். துஷ்டகேது தான் கூறுவதையே யவன் அவ்வளவு கவனமாய்க் கேட்கிறான் என்று கருதிக்கொண்டு,

"டாக்டர் தங்கவேலுப்பிள்ளை ஒரு முறை பாஷாணத்தால் ஒழிக்கப்பட்டால் பிறகு உனது நோக்கங்கள் சாதாரணமாய்ப் பலித்துவிடும். அதன் பிறகு ஒரு இக்கட்டும் நேரிடாது. ஏனெனில் அந்தத் துஷ்டப்பயலே பத்மநாயகியை அரண்மனையில் கொண்டு வந்து சேர்த்தவன். அவனே அவளைக்கொண்டு அரசனை மயங்க வைத்த

வன். அவனே நீ இராணியோடு அரசனுகச் சிம்மாதனத்தில் அமரக்கூடாதென்று சதி செய்தவன்.

ஆகையால் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையே முதலில் பலிவைக்கப்படவேண்டும். அவனை யொழிக்கும் பாஷாணத்தை யுன் கரங்களே யவனுக்கு எதிலேனும் கலந்து கொடுக்கவேண்டும்......'' என்று இவ்வாறு கூறினுன்.

அச் சமயம் அமரநாதன் பார்த்துக்கொண்டேயிருந்த படம் நன்ருய் ஒரு கதவுபோல் பாதி திறந்து கொண்டதும், அச்சந்தில் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் உருவம் தோன்றியது. அவன் முகம் ருத்திராகாரமா யிருந்தது. கண்கள் சிவந்து கோபத்தனல் வீசிக்கொண்டு "அடே! என்னையா கொல்லப்போகிருய். நீ அழிந்தாய் பத்திரம் பத்திரம்!'' என்று கூறுவதுபோல் அவ்வுருவம் மூக்கின்மேல் கை வைத்துச் சமிக்கை காட்டியது. அதைக்கண்ட அமரநாதன் பெருந்திகில் அடைந்தான். அவனுல் பேசவாவது அசையவாவது முடியாமல் ஸ்தம்பித்தவனுகி, முகம் வெளுத்து, பாதி ஸ்மரணை யிழந்து கீழே விழுந்துவிடும் நிலைமைக்கு வந்து விட்டான்.

அதைக் கண்ட துஷ்டகேது பயந்துபோய், எழுந்து "அமரநாதா! என்ன என்ன? உன் முகம் ஏன் இப்படி வெளுத்துவிட்டது? அய்யோ! என்ன உனக்கு?'' என்று எழுந்து அவனருகில் சென்ருன். அமரநாதன் உடனே சற்று சமாளித்துக்கொண்டு "ஆம் ஆம்; தேகம் சற்று அசௌக்கியமா யிருந்தது. இப்போது ஒன்றுமில்லை'' என்ருன். துஷ்டகேது கோபமடைந்த முகத்தோடு அவனை நோக்கி,

"ஓ தெரியும் தெரியும். எல்லாம் தெரிந்துகொண்டேன்'' என்ருன்.

அமரநாதன் மிக்க வியப்போடு, "என்ன? நீ எல்லாம் தெரிந்துகொண்டாயா?" என்முன்.

துஷ்டகேது — "ஆகா பூரணமாய்த் தெரிந்துகொண்டேன். நீ தைரியமில்லாதவன். ஆம். தெரிகிறது. டாக்டரைக் கொல்லவேண்டும் என்றதே நீ தைரியமிழந்துவிட்டாய். உன் கரத்தால் பாஷாணம் அளிக்கப்படவேண்டுமென்றதே உனக்கு இடிவிழுந்துவிட்டது. அப்போதுதான் உன் முகம் வெளுத்து ஆவி சோர்ந்துவிட்டது. டாக்டரையொழித்துவிடவேண்டுமென்று மட்டும் உனக்குப் பூரணமான பிரியமிருக்கிறது. ஆனல் அவனைக்கொல்ல உனக்குத் தைரியமில்லை. யாராவது கொலையாளியைக் கொண்டு கூலி கொடுத்துவேண்டுமாயின் செய்வாய். நீ கோழையென்று உன் முகத்திற்கு முன்னேயே கூறுகிறேன்" என்முன்.

அமரநாதன் வியப்படைந்து, ஆனவரையில் இவன் அப்படத்தைப் பார்க்காதிருந்ததே நல்லதாயிற்றென்று எண்ணிக்கொண்டு "துஷ்டகேது! நான் சாந்தமாகவே கூறுகிறேன் கேள். நான் கோழையல்ல. இப்போதே நீ உன் கத்தியையெடுத்துக்கொள்! நீ ஆத்திரப்பட்டு என்னை அவமரியாதையாய்க் கூறியதற்காக உன்னைத் தண்டிக்க ஆயத்தமாயிருக்கிறேன். முதலில் ஆத்திரத்தால் என் முக்கிய விரோதியைக் கொன்றுவிடவே கருதினேன். ஆனல் பாஷாணம் கொடுத்துக்கொல்வது சுத்த வீரன் செய்கையல்லவாதலின் எனக்குப் பிரியமில்லை" என்முன்.

இதற்கிடையில் துஷ்டகேது "நாம் இவனை விரோதம் செய்துகொள்வதில் ஒருபயனுமில்லை" என்று சிந்தித்துக்கொண்டு "நண்பனே! நான் அப்படிக் கூறியதற்

காக விசனிக்கிறேன். என்னை மன்னிக்கவேண்டும் உன் காரியம் கெட்டுப்போகிறதே யென்ற ஆத்திரத் தாலேயே யிவ்வாறு கூறினேன்'' என்றான்.

அமரநாதன்:—"நீ கூறியதற்காக நான் உன்னை மன்னி த்துவிட்டேன். நான் ஒரே முடிவாய்க் கூறு கிறேன். டாக்டர் தங்கவேலுப்பிள்ளையைக் கொல் கிறது என்ற ஏற்பாட்டையே அடியோடு விட்டுவிட் டேன். இனி யதைக்கனவிலும் நினைக்கமாட்டேன்.'' என்றான்.

அவன் இன்னும் டாக்டர் அப்படத்தின் சந்தில் நின்றுகொண் டிருக்கிறானென்றே கருதிக்கொண்டு, அப் படத்தை நோக்கினான். அது எப்போதும்போ லிருந் ததேயன்றி மற்றொன்றும் புலப்படவில்லை.

துஷ்டகேது "அடடா! இவன் என்ன அடியோடு இவ்விஷயத்தில் பிரவேசிக்காமல் விட்டுவிடுவான் போல் இருக்கிறதே'' யென்று வியாகூலமுற்று, "அப்படியானால் என்னதான் செய்யப்போகிறாய்?'' என்றான். அமர நாதன் "நான் என் தமயனுக்குக் கடிதம் எழுதி அவர் எப்படிப் புத்தி கூறுகிறாரோ அப்படி நடப்பேன்'' என் றான். துஷ்டகேது. "சரி நான் எப்போதும் உனக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் உன் எதிரி களால் உன் உயிருக்கு ஆபத்து நேராமல் ஜாக்கிரதையா யிரு'' என்றான்.

அமரநாதன் ஒரு சமயம் டாக்டர் இன்னும் படத் தின் பின் இருக்கலாகுமென்று எண்ணிக்கொண்டு "என் விரோதிகள் என்மேல் காரணமின்றித் துவேஷம் கொண் டிருந்தாலும், என்னைக்கொலை செய்யும் படியான அத் தகைய அக்கிரமத்தைக் கருதுவார்களென்று நான் நம்ப வில்லை. நான் மனப்பூர்வமான நம்பகத்தோடு அவர்களி

டமே செல்கிறேன். இப்போது நேராய் அரண்மனைக்கே போகிறேன்'' என்றான்.

அதன் பிறகு கூட்டாளிகளாகிய இருவரும் தாங்கள் ஆரம்பம் செய்த பாதகமான ஆலோசனை இவ்வாறு ஒரு முடிவிற்கும் வராமல் கடைசியில் பயனற்றதாய்ப் போய் விட்டதை யறிந்து இச்சமயம் பிரிந்து செல்வதே நல மென்று கருதினார்கள். அவ்வாறே அமரநாதன் விடை பெற்றுக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

இரண்டு நாட்கள் கழிந்தபின் இறந்துபோன அரச னுடைய சவம் அதற்குரிய மரியாதையோடும் ஆடம்பரத் தோடும் அரசர்கள் அடக்கம் செய்யப்படும் மயான பூமிக் குக்கொண்டுபோய் அடக்கம் செய்யப்பட்டது.

மூன்றாம்நாள் காலை எழுமணிக்கு நகர் முழுதும் பெருங் கொண்டாட்டமா யிருந்தது. அரண்மனை முழு தும் மிக்க ஆடம்பரமாய் அலங்கரிக்கப்பட்டது. ஏனெ னில் அன்று ஜீவரத்னம் இராஜகுமாரி அந்த நாட்டின் இராணியாக முடிசூட்டப்படும் நாள். சரியாய்க் குறித்த வேளைக்கு மந்திரி பிரதானிகள் இராஜாங்க முக்கிய உத்தி யோகஸ்தர்கள் மிக்க செல்வம் பொருந்திய பிரபுக்கள், சீமாட்டிகள், பிரபல வர்த்தகர்கள், சிற்றரசர்கள், மேட் டிக் குடிகள் யாவரும் சபாமண்டபத்தில் வந்து நிறைந்த தும் தேசாசாரப்படி இராஜகுமாரிக்கு முடிசூட்டப்பட் டது. அன்றுமுதல் ஒருவாரம் அரண்மனையில் விருந்து களும் கேளிக்கைகளும், வேடிக்கைகளும் நடத்தப்பட் டன.

முடிசூட்டப்பட்ட தினம் இராஜாங்கக் காரியதரிசி, அந்த இராஜாங்கத்தில் ஒரு இராஜகுமாரர் பதவிக்கு உயர்த்தப்பட்டதோடு அந்த அந்தஸ்திற்குத்தக்க பூஸ்திதி யும் அவருக்கு அளிக்கப்பட்டது. இலாயர் வேணுநாதர்

காரியதரிசி பதவிக்கும், இராஜாங்கப் பொக்கிஷ தாரராக வும் உயர்த்தப்பட்டார்.

அமரநாதன் அரண்மனையிலுள்ள தன் அறைக் குள்ளேயிருந்தானேயன்றிச் சடங்கு நடக்குமிடத்திற்குச் செல்லவேயில்லை. துஷ்டகேதுவோ தன் அரண்மனையை விட்டு வெளிக்கிளம்பவேயில்லை. ஜீவரத்னம் இராஜகுமாரி அரசியாகப் பட்டத்திற்கு வந்ததால், ஜனங்கள் மிக்க ஆனந்தமாய் அச்சம்பவத்தைக் கொண்டாடினார்கள்.

13-வது அத்தியாயம்.

ஆத்மநாதம்பிரபுவும் அவர் மனைவியும்—அதிசய சகுனம் — குடும்பசாபத்தைப்பற்றிய சரித்திரம் — பிரபுவும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் — டாக்டரின் பெரும் பொய்.

இச்சம்பவங்கள் நடந்த ஒருவாரங்கழித்து ஒருநாள், மாலைப்போது ஆத்மநாதம்பிரபுவும் அவர் மனைவி யாகிய சீமாட்டியும் தங்கள் தோட்டத்தில் உலவிக்கொண் டிருந்தார்கள். அச்சமயம் தன் கொழுநர் அப்போதைக் கப்போது ஏதோ இரகசியமான மனோவியாகூல முடைய வர்போல் முகம்வாடிச் சோர்வடைந்து காணப்படுவதை யறிந்த சீமாட்டி தன் கணவரைநோக்கி அதைப்பற்றிக் கேட்டாள்.

பிரபு ஒருவாறு அதை மறைக்கப் பார்த்தும் சீமாட்டி "இல்லை இல்லை. தங்கள் வியாகூலம் நமது அருமைப் புத் திரியாகிய குசலாம்பாளைப்பற்றியதா யிருக்கிறதென்று நான் சந்தேகப்படுகிறேன். ஏனெனில் அன்று அவள் அணிந்திருக்கும் சங்கிலியைப்பற்றித் தாங்கள் அவளை

பிக்க ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கைசெய்தீர்கள். இதனால் நமது புத்திரிக்குப் பிறந்ததுமுதலே ஏதோ கெடுதி சம்பவிக்கும்போ லிருக்கிறதென்று நான் பீதி யடைந்திருக்கிறேன். இதுவே உண்மை" என்றாள்.

பிரபு "நான் அப்போது கூறியதை யிப்போது கூறு கிறேன் கவனமாய்க் கேள். நான் அணிந்திருந்த சங்கிலி யில் பாதியை நமது குழந்தைக்கு அளித்தேன். இம் மாதிரி தந்தையின் சங்கிலியை இரண்டாய்ப் பிரித்துக் கொடுத்தால் அதற்குத் தெய்வீக சக்தியுண்டாகிறது. ஆனால் அதன் மற்றப்பாதியை யணிந்து கொள்வோரும் இந்தப்பாதியை யணிந்துகொள்வோரும் சினேகமாய்ச் சேர்வார்களானால் அது இருவர்க்கும் மிக்க தீங்கை யுண்டாக்கும். ஆகையால், நமது குழந்தைக்கு வயது வந்து விட்டபடியால் 'ஒருசமயம் மற்றப் பாதியை யணிந்திருக்கும் எந்த வாலிபனையேனும் கண்டு அவன் மேல் பிரியம்வைத்து நட்புக்கொள்ள விரும்பின், உடனே இந்தச் சங்கிலியை யவனுக்குக் காட்டு. அவன் மற்றப் பாதியைக் காட்டுவானானல் உடனே அவனை விட்டோடி விடு. அவனோடு நட்புச் செய்யாதே. ஏனெனில் அப் படிச் செய்தால் இருவர்க்கும் மிக்க கெடுதி நேரிடும். எப்படியெனில் அப்போது அதன் தெய்வீகத் தன்மை பெரிய சாபமாய் மாறிவிடும்.' என்று அவளுக்குக் கூறி னேன். இதில் நீ சந்தேகப்படவேண்டிய காரணம் ஒன்று மில்லையே என்றார்.

சீமாட்டி:—"இப்போது அதைப்பற்றி எனக்கிருந்த கல வரம் நீங்கிவிட்டது. ஆயினும் ஏதேனும் இரகசிய வருத்தம் இருக்கலாகாதோ?" என்றாள்.

பிரபு:—"அப்படி யொன்றுமில்லை. உண்மை யென்ன வெனில், என்னுடைய பட்டமும் அந்தஸ்தும் ஆஸ்தி

யும் யாவும் எந்த மூதாதையால் அனிக்கப்பட்டதோ அவர் பெரும்பாதகம் செய்தவராயிற்றே; அப்படிப் பட்டவருடைய சந்ததியிற் றோன்றினேமேயென்றே எனக்கு வியாகூலம்" என்றார்.

அதன்மேல் புருடனும் மனைவியும் சமாதானமாய்ச் சம்பாஷித்துக்கொண்டே தங்கள் மாளிகைக்குள் சென் றார்கள். பிரபுவுக்கு எச்சந்தர்ப்பத்தாலாவது தமது குடும்பத்திலுள்ள கோரமான சாபத்தின் விவரம் தமது மனைவிக்குத் தெரிந்து விட்டிருக்கிறதோ வென்ற பயம் அதிகமாயிருந்தது. ஆனால் கடைசியில் அது வெளிப் படவில்லையென்று அவர் மனதிற்கு நிம்மதியுண்டாயிற்று.

பிரபுவுக்குத் தன் மூதாதையைப்பற்றிய விஷயம் நினைவிற்கு வந்து வியாகூலத்தை யுண்டாக்கும்போதெல் லாம் அவர் மனம் தன்னை யறியாமலே அம்மூதாதையின் படம் இருக்கும் அறைக்குச் செல்லப்பிரியங் கொள்ளும். இப்போதும் அவ்வாறே இருவரும் மாளிகைக்குள் பிர வேசித்ததே சீமாட்டி தன் அறைக்குச் செல்ல, பிரபு படம் இருக்கும் அறைக்குச் சென்றார். அவர் அங்கு சென்று ஒரு ஆசனத்தில் உட்காரப்போகும்போது ஒரு சம்பவத்தைக் கண்டு திடுக்கிட்டு "ஆ இதென்ன. இப் போதென்ன விசேஷம் நேரிடப்போகிறது?" என்றார்.

ஏனெனில் தம் மூதாதையின் படம் கீழே விழுந்து கிடக்கக்கண்டான். பிரபு சற்றுநேரம் சிந்தித்து "நமது தந்தையிறந்ததினத்திற்குமுன் இரவு இப்படித்தான் விழுந் தது மறுபடி நமது கலியாணத்தினன்று விழுந்தது. அதன் பிறகு அன்று அப்பரிதாபமான நமது நண்பர் டாக்டர் தேவராஜூப்பிள்ளை நமது குழந்தையை யெடுத்துக் கொண்டு சென்ற தினம் இப்படியே இது விழுந்தது. இதென்ன? நமது குடும்பத்தில் ஏதேனும் ஒரு விசேஷ

சம்பவம் நேரிடும்போதெல்லாம் இது இப்படியே விழு கிறது. இது படமாக ஒரு கித்தான்மேல் எழுதப்பட்ட உருவமேயாயினும் இதற்கு உணர்ச்சி இருக்கிறதோ! ஆனல் இப்போதென்ன விசேஷம் நேரிடப்போகிறதோ தெரியவில்லையே'' என்று கூறிக்கொண்டே அப்படம் விழுந்த காரணம் என்னவென்று பார்க்கக்கருதி அதனரு கிற் சென்று சுவரையும் படத்தையும் பார்த்தார். சுவரி லிருக்கும் ஆணி கொஞ்சங்கூட அசையாமல் அப்படியே யிருந்தது. படத்திலிருக்கும் கயிறும் அற்றுப்போகா மல் அப்படியே யிருந்தது. பிரபு "எப்போதும் இப் படித்தான் நேரிடுகிறது. மிக்க ஆச்சரியம். மிக்க ஆச்ச ரியம்'' என்று கூறிக்கொண்டே படத்தைப் பழையபடி அது இருந்த விடத்தில் மாட்டிவிட்டு ஆசனத்தில் உட் கார்ந்து தன் மூதாதையின் சரித்திரத்தைச் சிந்தித்துக் கொண்டே யிருந்தார். அக்குடும்பத்திற்கு நேரிட்ட கோரமான சாபத்திற்குக் காரணம் அச்சரித்திரத்திலடங் கியிருப்பதால் இங்கு அதைச் சுருக்கமாய்க் கூறுகிரேம்; மனிதனுடைய பேராசையும், கெட்ட நடக்கைகளும் எத் தகைய பாபகரமான செயல்களைச் செய்யும்படி தூண்டு கின்றன வென்பது இச்சரிதையில் நன்கு விளங்கும்.

இப்பிரபுவின் பெயர் வீரசிங்கம் பிரபு என்று முன் னமே கூறியிருக்கிரேம். அவர் காலத்தில் அவர் இரு பத்தைந்து வயதுடையவராயிருந்தபோது சாதாரண மான ஒரு குடியானவனுடைய புத்திரராகவே இருந்தார். அப்போது அன்னிய நாட்டரசனுகிய ஒரு குரூர அரசன் அவர்கள் நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். அப் போது அரசன் புதிதாய்ச் சேகரித்த சைனியத்தில் வீர சிங்கன் என்ற இவர் ஒரு உத்தியோகஸ்தனுக அமர்ந்தார். இயற்கையில் இவர் சற்றேனும் ஈவிரக்கமாவது ஜீவ

காருண்யமாது இல்லாக்கொடிய துஷ்ட மிருக சுபாவ முடையவர்; எதற்கும் அஞ்சாத நெஞ்சர். ஆகையால் நடந்த யுத்தங்களில் துணிகரமாய் எதிரிகளோடு யுத்தம் செய்து ஜெயித்து அரசனுடைய தயவைப்பெற்றார். இவர் பன்முறை மிக்க காயங்களடைந்தும் அங்கவீனப்பட வில்லை யாதலால் கடைசி வரையில் பூரண வீரதீரத்தோ டேயே சண்டையிட்டுப் படிப்படியாய் உயர்ந்த பதவிகளை யடைந்து கடைசியில் சேனாதிபதியாக ஆய்விட்டார்.

அந்த யுத்தத்தில் அரசனுக்கு எதிரியின் நாட்டில் பெரும்பாகமும் மிக்க பொருளும் கிடைத்தன. இவருக் கும் ஏராளமான கொள்ளைப் பொருள் கிடைத்தது. சண்டை முடிந்து சமாதானம் ஏற்பட்டபோது அரசன் வீரசிங்கனுக்குப் பிரபுப் பட்டமும் அதற்குத்தக்க ஏராள மான பூஸ்திதியும் செல்வமும் பரிசாகவளித்தான். வீர சிங்கம் பிரபு உடனே ஒரு மாளிகையைக் கட்டிக்கொண்டு ஒரு சீமானுடைய புத்திரியை விவாகம் செய்துகொண் டார். மணம் புரிந்துகொண்டபோதிலும் அப்பிரபு தன் குடிகளிடத்தும் தன் நண்பரிடத்தும், தன் மனைவி யிடத் துங்கூடக் குரூரமாகவும் கொடுமையாகவுமே நடந்து கொள்பவர். அக்காலத்தில் பிரபுக்கள், ஜமீன்தாரர்கள், மிட்டாதாரர்கள், இவர்களுக்கே அரசன் பூமிகளை விட்டு விட்டு அவர்கள் மூலமாய் வரிவசூலித்துக்கொள்வது வழக் கம். அதனால் இப்பிரபுக்கள் குடிகளை யெவ்விதக் கொடு மையாய் நடத்தினும் கேட்பாரில்லை. நமது வீரசிங்கம் பிரபுவோ குடிகளை மிக்க குரூரமாய் இரக்கமின்றி நட த்துபவர்.

இவர் சிற்றின்பத்திலும், குடி, பந்தயம் முதலிய வீண் விஷயங்களிலும் பணத்தைக் கண் மூடித்தனமாய் விரையம் செய்பவரானதால் கொஞ்சக்காலத்திற்குள் தன்

பூஸ்திதி முழுமையும் ஜம்புகேசன் என்ற ஒரு ஸௌகாரி டம் பெருந்தொகைக்கு அடகு வைத்துவிட்டார். அவன் அதிக வட்டி வாங்கிச்சீவிக்கும் யூத ஜாதியைச் சேர்ந்த வன். பிரபு பந்தயச் சண்டைகளுக்கும், பந்தயவேட்டை களுக்கும் ஏற்பாடு செய்து, எதிலும் வல்லவராய் எல்லா வற்றிலும் ஜெயமடைந்து நல்ல பணம் சம்பாதித்தார். ஆயினும் அக்கிரமச் செலவிற்கு எதுதான் போதும்?

இந்த நிலைமையிலிருக்கும்போது ஒருநாள் பிரபுவின் காரியஸ்தன் வந்து பொக்கிஷத்தில் ஒரு காசுகூட இல்லை யென்றான். பிரபுவுக்கு ஒரு பேராசை யுண்டு. அதாவது, தன்னால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு கௌரவமும் பெருமை யும் பொருந்திய கோத்திரம் உலகில் நீடித்திருக்கவேண்டு மென்ற ஒரு ஆசையுண்டு. பிரபுவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. அது பிறந்தது முதல் நமது சந்ததி நம் மோடு நசித்துவிடாதென்று தைரியமடைந்து அப்புத் திரனை மிக்க பராமரிக்கையோடு வளர்த்தார். இவ ருடைய பட்டம் பூஸ்திதியோடு சேர்ந்தது. ஆகையால், தான் இறப்பதன் முன் அப்பூஸ்திதியை மீட்காவிட்டால் தன் புத்திரனுக்குப் பூஸ்திதி கிடைக்காமற் போவதோடு பட்டமும் கிடைக்காதுபோம். அத்தோடு தன் வமிசக் கௌரவம் போய்விடும். ஆகையால் பொக்கிஷத்தில் காசில்லையென்றதே பிரபு சற்றுநேரம் ஆழ்ந்த சிந்தனையி லிருந்து, பிறகு மனதை யொருவாறு தேற்றிக்கொண்டு தனக்குள் ஒரு பயங்கரமான தந்திரயோசனை செய்து கொண்டார்.

அதாவது தன் போன்ற செல்வமும் பலமுமுடைய பிரபுக்களைத் தந்திரமாய்ப் பணக்காரராகிய அந்த யூதர் களுக்கு விரோதமாய்த் தூண்டிவிட்டார். யூதர்கள் சூக் கும புத்தி யுடையவர்கள். அவர்கள் பணத்தை அதிக

வட்டிக்குக் கொடுத்துப் பணம் சேர்ப்பதையே தொழிலாக வுடையவர்கள். ஆகையால் அவர்கள் எல்லாருமே ஏறக்குறைய மிக்க செல்வவந்தர்கள். இதனுல் பிரபுக்கள் அவர்களைப் பலவித இம்சை செய்து அவர்களுடைய செல்வத்தைக் கொள்ளை யடிக்கத் தொடங்கினுர்கள். யூதர்கள் இவ்விதமாக மிக்க இக்கட்டான நிலைமையில் சிக்கி அவதிப்படும்போது, நமது வீரசிங்கம் பிரபு தான் கடன் கொடுக்கவேண்டிய ஜம்புகேசம் ஸௌகாரை யழைப்பித்து,

"ஸௌகார்! நான் உனக்குக் கொடுக்கவேண்டிய கடனைக்கொடுத்துவிட இப்போது ஆயத்தமாயிருக்கிறேன். ஆகையால் நான் எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரத்தை யெடுத்துக்கொண்டு வா" என்ருர். ஸௌகார் "ஆ பிரபுவே! இப்போது பிரபுக்கள் எங்கள் ஜாதியார்மேல் கோபங்கொண்டு எங்களுக்குச் செய்யும் இம்சைகள் கடவுளுக்கே தெரியும். எங்கள் கடைசிக் காசை யளிக்கும் வரையில் எங்களை யிம்சைசெய்து விடுகிருர்கள். இச்சங்கதி தங்களுக்குத் தெரியாதுபோலிருக்கிறது. இப்போது நான் தங்களிடம் பெருந்தொகையான பணம் வாங்கின சங்கதி தெரிந்தால் என் பணம் முழுமையும் நான் கொடுத்துவிடும் வரையில் என் பிராணனை வாங்கி விடுவார்களே!" என்ருன். இப்பிரபுவே இக்கலகத்திற்கு முதற் காரணமாயிருந்து தூண்டினவர் என்று அவனுக்குத் தெரியாது.

பிரபு:—"நண்பனே! அதற்காக நீ பயப்படவேண்டாம். உனக்கு அப்படி ஆபத்தாயிருந்தால் உன் பணத்தைக் கொண்டுவந்து இங்கே வைத்துவிடு. நீ எனக்குப் பெரிய உதவி செய்திருக்கிருய். இச்சமயத்தில் நான் அதற்காக என் நன்றியைக் காட்டச் சித்தமா

யிருக்கிறேன். இது மட்டுமல்ல. நீ யிங்கேயே வந்து இரு. என் மாளிகைக்குள் நீயிருக்கிற வரையில் உனக்குத் தீங்குசெய்ய எவனும் கருதமாட்டான். அப்படி யெவனேனும் வந்தால் அவன் என்னைக் கொன்றுவிட்டே யுனக்குத் தீங்குசெய்ய வேண்டும்.'' என்றார்.

அந்த ஸௌகார் பிரபுவின் வார்த்தைகளை யுண்மையயென்றே நம்பி அவருடைய அன்பிற்காக மிக்க சந்தோஷமடைந்து வந்தனமளித்தான். அவன் ஏகாங்கியாயிருப்பவன்; அவனுக்குச் சுற்றத்தார் ஒருவருமேயில்லை. ஆனால் மிக்க செல்வமுடையவன். அவன் அன்று இரவே வண்டிகளில் தன் செல்வத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு பிரபுவின் மாளிகைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

பிரபு தன் இரும்புப் பெட்டிகளையே யவனுக்களித்து அவனுடைய விலை யுயர்ந்த நகைகள், பொற் கட்டிகள் முதலிய பெருஞ் செல்வத்தை யப்பெட்டிகளில் வைத்து விட்டுச் சாவியை யவனையே வைத்துக்கொள்ளும்படி செய்தார். பிரபு அவனை நோக்கி "நண்பனே! எதற்கும் உன் பணம் மிக்க பாதுகாப்பான விடத்தில் வைக்கப்படுவது நலம். ஆகையால் நான் ஒரு இரகசிய இடங்காட்டுகிறேன் வா!'' என்றார்.

அவ்வாறே அரண்மனையிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் வழியில் ஒரு நீண்ட தாழ்வாரம்போன்ற வழியே இருவரும் சென்றார்கள். அதன் கோடியில் தோட்டத்தின் வழியாக அந்தப்பக்கம் வருவோர்கள் மேல்மாடிக்கு ஏறிச் செல்வதற்காக ஒரு சுழல்படி யிருந்தது. அப்படிக் கட்டின்கீழ் ஒரு இரகசியமான சிறு சுரங்கம் இருந்தது. பிரபு கூறியபடி ஸௌகார் தன் நகைகள், பெருந்தொகை

பெறும்படியான தங்கப்பாளங்கள், சவரன்கள் முதலிய யாவற்றையும் கொண்டுவந்து அங்கு வைத்தான். அச் சமையம் திடீலென்று வீசிய காற்றினால் தரையில் வைத் திருந்த தீபம் அணைந்துவிட்டது. ஸெகார் அதைத் தட விப்பார்க்கக் குனிந்தான். அப்போது பிரபுவின் கண் களுக்கு நட்சத்திரங்களின் பிரகாசம்போல் ஜொலிக்கும் சிறு வஸ்துக்கள் தோன்றின. அவர் உற்று நோக்கிய போது ஸெளகார் அணிந்திருக்கும் அங்கியின் உட்பக்க மிருந்தே அப்பிரகாசம் தோன்றுவதென்று தெரிந்தது. "ஒகோ இவன் உயர்தர இரத்தினங்களை அங்கியின் உள் பக்கம் வைத்து தைத்துவிட் டிருக்கிறான். அவற்றின் பிர காசம் சீலையின் மூலமாய் ஊடுருவி நமக்குப் புலப்படு கின்றது" என்று பிரபுவின் மனதில் உடனே பட்டது. அவர் தான் என்ன செய்யலாம் என்று ஒரு விநாடிகூட யோசனை செய்யாமலே, உடனே தன் இடையிலிருந்த கட்டியை யெடுத்துக் குனிந்துகொண்டிருக்கும் அப்பரி தாபமான ஸெகாரின் தோட்களுக்கு இடையில் பலமாய் ஓங்கிக் குத்திவிட்டார். நமக்கு இந்த ஆபத்துக்காலத்தில் தயவோடு அடைக்கலம் தந்து உதவி புரிகிறானென்று சந் தோஷத்தோடு நம்பிய அந்தமனிதன் "ஓ கடவுளே! தாங்களே......" என்று ஒரே சத்தமிட்டு மறுவினாடி சவமாய் விழுந்தான். பிரபு உடனே அவன் உடைகளைக் கழற்றிக்கொண்டு சவத்தை யங்கேயே விட்டுவிட்டுத் துரிதமாய்த் தன் அறைக்குச்சென்று சட்டையை யறுத்து உள்ளிருக்கும் இரத்தினங்களை யெடுத்தார். அவைகள் தாம் ஒருபோதும் கண்டிராத அவ்வளவு பெரிய கற்களாக வும் மிக்கவிலை மதிக்கத்தக்கனவாகவும் இருந்ததைக் கண் டதே அவருக் குண்டான ஆனந்தத்திற் களவேயில்லை. அச்சட்டையிலேயே யிருந்த, தான் ஸௌகாருக் கெழுதிக்

கொடுத்த அடமானப் பத்திரத்தை யுடனே கொளுத்தி விட்டார். அதன்பிறகு சுரங்கத்திற்குச்சென்று அங்கிருந்த பொருள்களை யெல்லாம் எடுத்துவந்து தன் இரும்புப் பெட்டிகளில் வைத்துக்கொண்டார். அவர் எப்போதும் கண்ணுலுங் கண்டிராத அவ்வளவு செல்வமுடையவராக ஆய்விட்டார். சுமார் ஐந்தாறு நாட்கள் கழித்து மாளி கையில் துர்நாற்றம் கிளம்பியது. பிரபு உடனே அதன் காரணத்தை யறிந்துகொண்டு இரவில் சென்று சவத்தை யெடுத்துத் தோட்டத்தில் புதைத்துவிட்டார்.

இத்தகைய படுகொலை செய்து அபரிமிதமான செல் வத்தைப் பெற்று அப்பிரபு சந்தோஷத்தோடும் மனோ நிம்மதியோடும் தன் வாழ்நாட்களைக் கழித்தாரா? இல்லை யில்லை. அந்தக் கொடிய பாபத்திற்காக ஆண்டவன் அளித்த தண்டனையாகிய மகா கொடிய சாபம் அவர் காலத்திலேயே அவரையே பற்றிக்கொண்டது. அதோடு விட்டதா? இல்லை. தான் மிக்க ஆசையோடு இவ்வுலகில் தலைமுறை தலைமுறையாக வளர்ந்துவரவேண்டுமென்று கருதிய தன் சந்ததிகளையும் தொடர்வதா யிருந்தது. ஒவ் வொரு மூன்றும் தலைமுறையில் பிறக்கும் ஆண் சந்ததியை யும் அக்கொடிய மகாகோரமானசாபம் பற்றிக்கொள்ளும். இக்கட்டளை அவருக்கே பூரணமா யறிக்கை யிடப்பட்டது. ஆனால் அது எவ்வா றறிக்கையிடப்பட்டது? தெய்வீக மாகவா அல்லது மனிதர்கள் மூலமாகவா? கனவின் மூல மாகவா? என்பது மர்மத்திலேயே யிருந்தது. ஆனால் பிரபு தன் மரணத்தறுவாயில் இச்சாபத்தைப்பற்றிய விஷ யங்களைத் தன் புத்திரனுக்குக் கூறியதோடு கொலை நடந்த விடத்திற்கு நேரே மேலிருக்கும் அறையிலேயே தன் உரு வப்படத்தை வைக்கவேண்டுமென்றும், அப்படியே வமி சத்தில் உற்பத்தியாகி அப்பட்டத்தை யடையும் ஒவ்

வொருவருடைய படமும் அங்கு வரிசையாய் வைக்கப்பட வேண்டுமென்றும், தன் புத்திரனுக்கும் பேரனுக்கும் இச் சாபத் தண்டனை நேரிடாதென்றும் தன் புத்திரனுடைய பேரனுக்கு இதன் கொடுமை யுண்டாகுமென்றும், இப்படியே இடையிடையில் இரண்டு பேர்களை விட்டுவிட்டு மூன்றுவது ஆளை இச்சாபம் பற்றிக்கொள்ளுமென்றும் கூறினர். இச்சாபத்தைக் குறித்த ஒரு பாட்டு உண்டு. அதில் இச்சாபத்தைப்பற்றிய விவரமனைத்தும் அடங்கி யிருந்தது. அப்பாட்டுக் கீழ்க்காணுமாறு:—

"பெருமை பொலிவுறு பருமணி பதித்த
மணிமுடி தாங்கி மகிழ்ந்துநீ யிருப்பினுங்
கட்கமுங் கவசமுங் கடுமையுந் தாங்கிச்
சிறப்புறு கலிமா செறுக்கோ டுகைத்து
எதிர்ப்போ ரில்லா விருமாப் போடு
மகிழ்ந்தே யிருப்பினு மதித்திதை யோர்வாய்ச்
சாயைபோல் விடாத சாபமே யுன்னைப்
பற்றித் தொடரும் பண்பீ தாதுநீ
சிந்திய செந்நீர் செவ்வா னேக்கி
வஞ்சந் தீர்க்க வேண்டிய முறையீ
டாண்டவ னடியிணை யண்டி நிற்றலும்
மண்டிய சாபநின் முடிமேல் வீழ்ந்தது
அடைக்கலம் புகுந்த அவ்வயோ திகனை
நள்ளிரு ளதனில் நயவஞ் சகமாய்க்
கொன்றவன் கொணர்ந்த கனகமும் பணியும்
ஒளியிடு மணியு மனதேன வெளவினைப்
பெட்டகத் திட்டனை பின்னவ னுடைதனைக்
களைந்து நீகண்ட கதிர்மணித் திரள்கைக்
கொண்டனை யதுபோற் கொடிவதன் கொண்ட
நெஞ்சு கலங்கும் நஞ்சாம் வினையினை
தீயெனத் தகிக்கும் தொலையா நலியையும்
நீயேற் றிடலொடு நின்வழி வந்தோர்

இருவர்பின் னேருவ ரிதனை முறைமுறை
யேற்றிட விதித்த தீக்கொடுஞ் சாபம்
நின்வழி வந்தோ னேருவ னேடுநாள்
சகிக்கோணுச் சாபம் சகித்த பின்னர்
அவன்நித முரைதுதி யாண்டவ னேற்பின்
தொன்மையாங் குலம்விடுத் தொழியுமீ தன்றே."

பிரபு இப்பாட்டை அச்சத்தோடு தனக்குத் தானே கூறிவிட்டுச் சற்று நேரம் ஆசனத்திலேயே பேசாமல் இருந்தார். அச்சமயம் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தபோது டாக்டர் தங்கவேலுப்பிள்ளை யுள்ளே வந்ததும் பிரபுவுக்கு வந்தன மளித்து "பிரபுவே! தாங்கள் வரும்படி யனுப்பிய கட்டளையின்படி உடனே வருவதற்கு அரண்மனையி லிருந்த வேலைகளால் ஆலசியம் நேர்ந்ததற்காக மன்னிக்கக் கோருகிறேன்" என்ருன்.

பிரபு:—"நண்பரே! மன்னிக்கவேண்டிய அவசியமே யொன்றுமில்லை. தங்களுக்கு அவகாசம் இருக்கும் போது வரும்படியாகத்தான் நான் கோரிக்கொண்டது. என் அருமை நண்பராகிய தங்கள் தமையனுருக்குப்பின் தாங்கள் அவரைப்போலவே எனக்கு நண்பராகவிருந்து வருவதற்காக நான் மிக்க வந்தன மளிக்கிறேன். நான் தங்களை வரும்படி கூறியது எதற்காக வென்ருல் பரிதாபமான என் புத்திரனைப்பற்றி விசாரிப்பதற்காகவே" என்ருர்.

டாக்டர் "பிரபுவே! தங்கள் மைந்தன் அந்தப்பரிதாபமான கோரதுக்கம் ஒன்று தவிர மற்றெல்லா விஷயங்களிலும் பூரணசுகத்தோடிருக்கிருன். அவன் மிக்க உயர்வான குணங்களை யுடையவன். மிக்க நன்னெறியும், ஜீவகாருண்யமும், பரோபகாரகுணமு முடையவன். ஏழைகளின் துன்பங்களை நீக்கி அதனுல் தன்

மனோ வேதனையைச் சாந்தப்படுத்திக்கொள்கிறான்.” என்றார். பிரபு அவனுக்குத் தன் பிறப்பைப்பற்றிய சந்தேகம் எள்ளளவும் கிடையாதல்லவா? என்றார். டாக்டர் “பிரபுவே! அந்த இரகசியந்தெரிந்தவர்கள் நால்வரில் தங்கள் மாளிகையிலிருந்த தோழியும் என் தமையனாரும் இறந்து போய்விட்டார்கள். இப்போதிருப்பது நாம் இருவருமே. இச்சங்கதி வெளிவர ஒரு வழியுமில்லை.” என்றார். பிரபு நான் கொடுத்த சங்கிலியை யெப்போதும் அவன் அணிந்து கொண்டே யிருக்கிறானென்று கேட்டார். டாக்டர், “அதில் தெய்வீகவல்லமை யிருக்கிறதென்று கூறியிருப்பதால் அவன் அதை யிடைவிடாது அணிந்து கொண்டே யிருக்கிறான். மேலும் மூத்தோர் கட்டளைக்கு அவன் ஒருபோதும் மீறி நடக்கவே மாட்டான். ஆனால் தாங்கள் அவனை யொருமுறையாவது கண்ணாற் பார்க்கவேணும் பிரியப்படவில்லையோ?” என்றார்.

பிரபு:—“அய்யோ! என்னால் முடியாது. அதிலும் நீர் அத்தகைய நற்குணங்களை யுடையவன் என்று கூறியிருப்பதால், நான் நேரில் அவனைக்கண்டால் என் புத்திரவாஞ்சை யடக்கமுடியாததாகிவிடும். ஆகையால் அந்த விஷயமட்டும் கூறவேண்டாம்” என்றார்.

86488

டாக்டர் அதன் மேல் என்னாலாகவேண்டிய விஷயம் இன்னும் ஏதேனுமுண்டோ வென்று கேட்டு ஒன்றுமில்லை யென்றுணர்ந்ததும் விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

அவர் சென்றபிறகு பிரபு சற்று நேரம் அங்கேயே யிருந்து பிறகு எழுந்து தன் அறைக்குச்சென்றார். அப்படம் கீழே விழுந்து விட்டது அவர் மனதிற்கு மிக்க வேதனையை யளித்தது. ஏனென்றால் அது அம்மாதிரி ஒரு

மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா 1—8—0.

புது! துப்பறியும்!! நாவல்!!!

வெளியாய் விட்டது.

மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0 தபால் கூலி பிரத்யேகம்.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
2-பாகமும் ...	4	0	பத்மாஸனி ...	0	14
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	கமலசேகரன் ...	1	12
சுவர்ணம்பாள் ...	0	12	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரு			சகோதரவாஞ்சை	0	6
டையசரித்திர உபதேசங்கள்	1	12	ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.